REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 13 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 92 இல. 63 | Wednesday 13, March, 2024 | 20பக்கங்கள் | 50/-

## IMF உடன் கலந்துரையாட எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவதற்கு மீண்டும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பளிக்கப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டும், ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்டவை கலந்துகொள்ளவில்லை.

06

# ஆங்கில மொழி பாடசாலைகளை 1,000 ஆக அதிகரிக்க தீர்மானம்



### அமைச்சரவை உபகுழுவுக்கு ஜனாதிபதி தெரிவிப்பு

### 2,500 ஆங்கில ஆசிரியர்களுடன் அவசர தேவையாக ஓய்வுபெற்ற 1,000 ஆங்கில ஆசிரியர்களையும் இணைக்க திட்டம்

### 2025 ஆம் ஆண்டளவில் 02 இலட்சம் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதே நோக்கமெனவும் ஜனாதிபதி தெரிவிப்பு

ஆங்கில ஆசிரியர்கள் 2,500 பேரை புதிதாக இணைத்துக் கொள்ள வேண்டுமெனவும் அவசர தேவை கருதி, மூன்று வருட ஒப்பந்த காலத்துக்கு ஆங்கில மொழி மூல பாடங்களை கற்பிக்கக்கூடிய 1,000 தகுதி வாய்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் உடனடியாக இணைக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். ஆங்கில மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கையை 1,000 ஆக அதிகரிப்பதாக அறிவித்த ஜனாதிபதி, 2025 ஆம் ஆண்டளவில் குறைந்தது 2,00,000 மாணவர்களாவது ஆங்கில மொழிக் கல்வியைப் பெறுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவிடமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்றைய பொருளாதார மாற்றத்துக்கு கல்வி இன்றியமையாத அங்கமாகும். இதை அறிந்து, கல்வி முன்னேற்றத்துக்காக அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழு (11) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது.

இந்தக் குழுவில் பிரதமர் தினேஷ் குணவர்தன, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம்ஜயந்த உள்ளிட்ட 08 அமைச்சர்கள் உள்ளனர்.

தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பில் குறுகிய கால மற்றும் இடைக்கால கல்வி மாற்றத்துக்கான செயல்முறைகளை

06

## வெஸ்லி கல்லூரியின் 150 வது ஆண்டு விழா



கொழும்பு சங்கரீ லா ஹோட்டலில் (11) நடைபெற்ற வெஸ்லி கல்லூரியின் 150 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். நாட்டுக்குத் தேவையான பிரஜைகளை உருவாக்குவதற்கு வெஸ்லி கல்லூரி முன்னோடிச் சேவையாற்றியுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக

06

GAZET

## 03

### மசாலா, வாசனை திரவியங்கள்

### மீள் ஏற்றுமதிக்கான இறக்குமதியை அனுமதிக்கும் வர்த்தமானி இரத்து

## பொருளாதார நெருக்கடி பாதிப்பு; ஜப்பான் 1600 மில். யென் உதவி

### ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து 1600 மில்லியன் ஜப்பான் யென்னை (3.3 பில்லியன் ரூபா) பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நேரடியான மனிதாபிமான உதவிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தி, அரச துறையை வலுப்படுத்துவதற்காகவும் ஜப்பானிய அரசாங்கம் ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க ஜப்பானின்

06

## IMF, தவிர்ந்த மாற்றுவழி வேறு எதுவும் கிடையாது

### அதிக பெறுபேறுகளை பெற அரசு கவனமாக அணுகவேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் தற்போதைய நிலையில் சர்வதேச நாணய நிதியம் தவிர்ந்த வேறு மாற்றுவழி கிடையாதென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நிதியத்திடம் இலங்கை மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தைகள் கட்டாயம் தேவையான ஒன்று என்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடியை சரிசெய்வதற்கு அதனைத் தவிர மாற்றுவழி கிடையாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

## பொருளாதாரத்தை பலப்படுத்த வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை

### காணிகளுக்கு ரூ. 02 இலட்சம் ஒதுக்கீடு



நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த விவசாய அமைச்சு பல்வேறு வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதாகவும், தற்போதும் 10 பேர்ச்சசுக்கும் அதிகமான வீட்டுத் தோட்டங்களுக்கு 02 இலட்சம் ரூபா ஒதுக்கீடுகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்தார்.

இதற்காக விவசாய அபிவிருத்தி திணைக்கம் 232 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் (12) நடைபெற்ற ஊடகவியலாளர்

06

### உத்தேச Port City வர்த்தக மையம்

## இலங்கையை செழிப்பான வர்த்தக மையமாக மாற்றுவதற்கான சான்று

### பிரதமர் தினேஷ் நேற்று தெரிவிப்பு




கொழும்பு துறைமுக நகர வர்த்தக மையம் இலங்கை, ஒரு செழிப்பான வர்த்தக மையமாக மாறுவதற்கான சான்றாகுமென பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர வர்த்தக மையத்தின் நிர்மாணப்பணிகளை நேற்று (12) ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் இலங்கையில் மிகவும் எதிர்பார்ப்பு நிறைந்த அபிவிருத்தித் திட்டத்தின் வருகையை குறிக்கும் மிக முக்கியமான நிகழ்வு

06

### அஸ்வெசும: 16,000 குடும்பங்களை

## முன்னேற்றும் இலக்குக்கு அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அஸ்வெசும சமூக நலன்புரி கொடுப்பனவு திட்டத்தின் கீழ், பயன்களைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2002 / 24ஆம் இலக்க நலன்புரி கொடுப்பனவு சட்ட

06

## இறக்குமதியாகும் பால் மாக்களின் விலைகள் குறைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மாக்களின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இவற்றின் விலைகளை அடுத்த வாரம் முதல் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர்

06

### ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 10-13 |
| --- | --- |
| ஸஹர் முடிவு | 04.49 |
| ஸுபஹ் | 05.04 |
| சூரிய உதயம் | 06.20 |
| ளுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

## இந்திய மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி தமிழக முதல்வர் கடிதம்



இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 22 பேரை, விடுதலை செய்யுமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கருக்கு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்களை விடுவிக்கத் தேவையான சகல இராஜதந்திர

06



## கல்வியால் முழு நாட்டையும் தமிழர்களுக்கு ஆள முடியும்

### சிறுபான்மையினர் என்ற எண்ணம் தேவையற்றது



எண்ணிக்கையில் தமிழர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் கல்வி அறிவால் முழு நாட்டையும் தமிழர்களால் ஆள முடியுமென, வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் உரையாற்றிய அவர்:

06

## திருக்கோயில் மாணவன் உயிரிழப்பு; கல்வியமைச்சு விசாரணை ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கிழக்கு மாகாண பாடசாலையொன்றில் மரதன் ஓட்டப் போட்டியின் போது திடீர் சுகவீனம் ஏற்பட்டு மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கல்வியமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நாட்டில் நிலவும் அதிக வெப்பமான வானிலை காரணமாக வெளிப்புற நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு கல்வியமைச்சு அண்மையில் பாடசாலை அதிபர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் விசேட சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது.

06

## எச்சரிக்கை மட்டத்தை விடவும் நாட்டின் வெப்ப நிலை அதிகரிப்பு

### அமைச்சு பொதுமக்களுக்கு அறிவுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

Ministry of Health

நாட்டில் தற்போது நிலவும் அதிகூடிய வெப்ப நிலை, எச்சரிக்கை மட்டத்தை விட தொடர்ந்தும் நீடிக்குமென்பதால் சிறுவர், முதியவர் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமென சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அதிகளவு வெப்பம் காரணமாக ஏற்படக்கூடிய நோய்கள் மற்றும் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ளும் வகையில் அடிக்கடி அதிகளவு நீரை பருகுமாறும்

06

## தாமரை கோபுர உணவகத்தில் இளம் சோடி மரணம்



கொழும்பு தாமரை கோபுரத்தில் உள்ள உணவகம் ஒன்றில், போதைப் பொருள் உட்கொண்ட இளம் சோடி, உயிரிழந்தது.

உடல் நலம் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், இவ்விருவரும் உயிரிழந்தனர். முல்லேரியா, உடுமுல்ல பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்ட அழகு நிலையத்தின் முகாமையாளரான ஹெட்டியாராச்சி

06

## 16 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் சொத்துள்ள உலகின் முதல் செல்வந்தர்

### டாங் வம்சத்தை சேர்ந்த பேரரசி வூ



கோடீஸ்வரர்கள் அல்லது பெரும் பணக்காரர்கள் என்றாலே, எலான் மஸ்க், அர்னால்ட் பெர்னால்ட், அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ், இந்தியாவின் பணக்காரர் முகேஷ் அம்பானி ஆகியோரின் பெயர்களே நினைவுக்கு வருகின்றன. ஆனால் வரலாற்றை புரட்டி

06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



## வெள்ளம், பீடைத்தாக்கம், காட்டு விலங்குகள் காரணமாக

# ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 5,718 ஏக்கர் நெல் வயல்கள் பாதிப்பு; நஷ்டஈடு கோரி விண்ணப்பம்

### மாவட்ட விவசாய காப்புறுதி சபை உதவிப் பணிப்பாளர்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இம்முறை பெரும்போகத்தில் செய்கை பண்ணப்பட்ட 5,718 ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையின் உதவிப் பணிப்பாளர் நதிதகம் ஹேவா (11) தெரிவித்தார்.

மேற்படி மாவட்டத்தில் 17 கமநல சேவை திணைக்களங்கள் காணப்படுவதோடு இவற்றிற்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் வெள்ளம், பூச்சிகளின் பாதிப்பு மற்றும் காட்டு யானைகள் விவசாய நிலங்களை அழித்தல் போன்ற காரணங்களினால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், பிரதேசத்திலுள்ள 3530 விவசாயிகள் விவசாயத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக விவசாய காப்புறுதி கோரி விண்ணப்பித்துள்ளனர்.

நான்கு மாதகாலமாக தொடர்ச்சியாக பெய்த அடை மழையின் காரணமாக 5656 ஏக்கர் நெல் வயல்களும், காட்டு யானைகளின் தாக்குதல்கள் காரணமாக 51 வயல்களும் மற்றும் பல்வேறு பூச்சிகளின் பாதிப்பு காரணமாக 11 ஏக்கர் வயல்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

ஆகக் கூடுதல் பாதிப்பு திஸ்ஸ மகாராமை யோத கண்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையிலேயே அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இங்கு 1908 ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஹம்பாந்தோட்டை மாவட்ட விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையின் உதவிப் பணிப்பாளர் நதிதகம் ஹேவா தெரிவித்தார்.

## சென்னையில் 76ஆவது சுதந்திரதின அமர்வு





சென்னையிலுள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகராலயம் இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் வகையில் சென்னை தாஜ் கோரமண்டலில் அண்மையில் வரவேற்பு நிகழ்ச்சியை நடத்தியது. இராஜதந்திர சமூகம், தமிழ்நாடு அரசாங்க அதிகாரிகள், முக்கிய வர்த்தக பிரமுகர்கள், தென்னிந்தியாவில் உள்ள இலங்கை நட்புறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் இலங்கை நலன் விரும்பிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி அதிபர் கௌரவிப்பு



பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை (09) பாடசாலை அதிபர் பஹீமா பாயிஸ் தலைமையில் கல்லூரி பாக்கிர் மாக்கார் மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கல்லூரியின் அதிபராக 10 வருட காலம் சேவையாற்றி ஊருக்கும் சமூகத்துக்கும் மூன்று வைத்தியர்கள் உருவாக பங்களிப்பு செய்தமைக்காக பாடசாலை அதிபர், சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதனை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் அதிபரிடம் கையளிப்பதையும் பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம். எம். ஷிஹாப் ஹாஜியார், உறுப்பினர் அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் (நளீமி) கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோமரத்ன உட்பட முக்கியஸ்தர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

# மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் 25ஆவது வருட பூர்த்தி விழா நிகழ்வு





**(அஷ்ரப் ஏ சமத்)**

தெஹிவளை மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் 25 வருட பூர்த்தி நிகழ்வும் இக்கல்லூரியில் கல்வியை பூர்த்திசெய்த 500க்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு நிகழ்வும் கல்லூரியின் தலைவர் கலாநிதி சிறாஸ் மீராசாஹிப் தலைமையில் கொழும்பு 7, தாமரைத் தடாக பிரதான மண்டபத்தில் (10) சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வெளிநாட்டு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, சுகாதார அமைச்சர் டாக்டர் ரமேஸ் பத்திரன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், சவுதி அரேபியா, பிரான்ஸ், நேபாளம் கனடா, பங்களதேஷ், துருக்கி மற்றும் அமெரிக்காவின் கிரைன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் இஸ்மத் மற்றும் இப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி அப்ரா சிராஜ், டாக்டர் ரபீக் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, சவுதி அரேபிய தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



அகில இலங்கை மனித உரிமைகள் சம்மேளனத்தின் வர்த்தக நாம தூதுவராக மேரியன்ஸ் இசைக்குழுவின் தலைவர் தேஷமான்ய, கலாநிதி நளின் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். அகில இலங்கை மனித உரிமைகள் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி சம்பிக்க லோவ், அதற்கான நியமனக்கடிதத்தை மேரியன்ஸ் தலைவர் நளின் பெரேராவிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். பொதுச் செயலாளர் எட்வர்ட் பெர்னாண்டோ, அகில இலங்கை மனித உரிமைகள் சம்மேளனத்தின் மேலதிக செயலாளர் லக்சிறி திசேரா, பணிப்பாளர் சஹீதா ஹெட்டியாராச்சி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தேசிய நாமல் உயனவின் உன்னத தேசிய பணியின் 33 ஆவது ஆண்டு

### மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் கையளிப்பு





இலங்கையின் மிகப் பெரிய நாக மரங்களை கொண்ட மற்றும் 500 மில்லியன் ஆண்டுகளுக்கும் பழமையான வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த தெற்காசியாவின் மிகப்பெரிய இளஞ்சிவப்பு பளிங்கு மலைத்தொடரைப் பாதுகாக்கும் தேசிய நாமல் உயனவின் உன்னத தேசிய பணியின் 33 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், தேசிய நாமல் உயனவின் ஸ்தாபகர் வனவாசி ராகுல தேரர் மற்றும் தேசிய நாமல் உயனவை சுற்றியுள்ள மக்கள் 1,000 பாடசாலை மாணவர்களுக்கு 6,000 ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கடந்த மார்ச் 02 ஆம் திகதி தேசிய நாமல் உயனவில் நடைபெற்றது. தேசிய நாமல் உயனவின் தாது கோபுரம் மிகப் பழமையானது என விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு மலர்கள் மற்றும் தீப பூஜையும் நடைபெற்றது. இந்நிகழ்வுக்காக பெருமளவிலான அதிதிகள் வருகை தந்திருந்தனர்.

இப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 1,000 சிங்கள மற்றும் முஸ்லிம் சிறுவர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக தேசிய நாமல் உயனவின் ஸ்தாபகர் வண. வனவாசி ராகுல தேரர் தெரிவித்தார்.

# பிரபல போதைப்பொருள் குற்றவாளி குடு சலிந்து விளக்கமறியலில்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் குற்றவாளியான சலிந்து மல்சிக குணரத்ன என்ற குடு சலிந்துவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பாணந்துறை பிரதான மஜிஸ்திரேட் நீதவான் சம்பிக்க ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி குற்றவாளி சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு துப்பாக்கிகளை பெற்றுக் கொண்டு அவற்றை குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அதற்கிணங்க நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றுள்ள படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் அவரைத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளனர்.

சந்தேக நபரான குடு சலிந்து 2023 மார்ச் 13 ஆம் திகதி மடகஸ்காரில் வைத்து சர்வதேச பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். அதற்கிணங்க சர்வதேச பொலிஸின் சிவப்பு எச்சரிக்கையைப் பெற்றுக்கொண்டு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

# லொறி மோதி இளைஞன் உயிரிழப்பு; சிலாபத்தில் சம்பவம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

சிலாபம் திகன்வெவ பிரதேசத்தில் வீதிக்கு அருகில் உழவு இயந்திரத்திற்கு எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன், அதேவீதியில் சென்ற பாரிய லொறியில் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என சிலாபம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் திகன்வெவ, மாரக்கெல பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த வீதியின் அருகே நின்றுகொண்டு உழவு இயந்திரத்திற்கு எரிபொருள் நிரப்பிக்கொண்டிருந்த இளைஞன் மீதே இவ்வாறு லொறி மோதியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் இளைஞன் தூக்கி வீசப்பட்டு சிறிய பள்ளமொன்றில் விழுந்ததாகவும், விபத்தில் கவிழ்ந்த லொறியின் முன்பக்க இரண்டு சக்கரங்கள் இளைஞனின் மார்பில் கடுமையாக தாக்கியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2024 மார்ச் 13 புதன்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மாசி 30
ராகுகாலம் : பகல் : 12.21 - 01.51வரை
சுபநேரம் : மாலை : 04.51 - 06.21வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



NSBM நிறுவனத்தின் கீழ்

## மருத்துவபீடத்தை உருவாக்க அமைச்சரவையில் அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வரையறுக்கப்பட்ட தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனத்தின் (National School of Business Management (NSBM).கீழ் மருத்துவ பீடமொன்றை உருவாக்குவதற்கும் அதன் மூலம் MBBS பட்டம் வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்த வகையில் கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, மருத்துவ சபை ஆகியவற்றின் நேரடி கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ், இந்த மருத்துவ பட்டத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பட்டப்படிப்புக்காக வருடாந்தம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் 500 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஹோமாகம ஆதார வைத்தியசாலையை, மருத்துவ கற்கை மாணவர்களுக்காக சிகிச்சை பயிற்சிகளை வழங்குவதற்கு பொருத்தமான அரசாங்க ஆஸ்பத்திரியாக பெற்றுக் கொள்வதற்கு National School of Business Management (NSBM).நிறுவனத்தினால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம், மருத்துவ கற்கை மாணவர்களின் சிகிச்சை பயிற்சிக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலையை உபயோகிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. இந்நிலையில் இதற்கு அழுத்தங்கள் இல்லாத வகையில் National School of Business Management (NSBM). நிறுவனத்தின் மருத்துவபீட மாணவர்களின் பயிற்சி மற்றும் பேராசிரியர்களுக்கான பிரிவு, அதற்கான வளங்களை பகிர்ந்தளித்தலை அடிப்படையாகக் கொண்டு ஹோமாகமை ஆதார வைத்தியசாலையை பயன்படுத்துவதற்கான பொறிமுறையை தயாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவ சபையினால் வெளியிடப்பட்டுள்ள மருத்துவ கல்வி தர உத்தரவை அடிப்படையாகக் கொண்டு, ஹோமாகம ஆதார வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நிதியை வழங்குவதற்கும் National School of Business Management (NSBM). நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

## தவக்கால சிந்தனை

### இறைவனின் எல்லையற்ற அன்பு

பல வருடங்களுக்கு முன்பு வில்லியம் யங் என்பரால் சிறிய குடில் என்ற நாவல் எழுதப்பட்டு, அது உலகளவில் பேசப்பட்ட நாவலாகவும் மாறியது. அந்நாவலானது மக் என்கிற மனிதன் வாழ்வில் எதிர்கொள்கின்ற அவலங்களையும் அதனால் கடவுள்மீது கொள்கின்ற வெறுப்பினையும் பின்னர் எவ்வாறு இறைவன்மீது அன்பு கொள்கின்றான் என்பதனைக் கதையாகக் கொண்ட அற்புதப் படைப்பாகும்.

இந்நாவலில் மையம் கொண்ட பல கதைகளுள், இன்றைய இறைவார்த்தையில் பிரதிபலிக்கப்படுகின்ற நிபந்தனையற்ற இறைவனின் அன்பினைக் குறித்து அதிகம் பேசுகிறது.

இன்றைய முதல் இறைவாக்கில் இறைவாக்கினர் ஏசாயா, இறைமக்களுக்கு கூறும் செய்தி, அவர்கள் அடிமைத்தன வீட்டிலிருந்தாலும் அவர்களது இந்த அவலநிலை மாற்றமடையும் என்ற நம்பிக்கையினை ஊட்டுகின்றார். மக்கள் கடவுள் எங்களை மறந்து விட்டார். கைவிட்டு விட்டார் என்று கதறி அழுகின்ற வேளையிலும் என்ன நடந்தாலும் கடவுள் அவர்களுடனேயே இருப்பார் என்பதை மீண்டும் நினைவூட்டுகின்றார்.

கடவுளின் நிபந்தனையற்ற அன்பினூடாக அவர் நமது வாழ்வின் இருள் சூழ்ந்த வேளையிலும் நம்மோடே இருப்பார். நமது அடிமைத்தனத்திலும் அவர் நம்மைக் கைவிடமாட்டார்.

அந்த நாவலின் பிரதான கதாபாத்திரமாகிய மக் தனது வாழ்வில் வெறுமையினை, பாலைவனத்தை உணர்கின்றான். கடவுள் தன்னையும், தான் அன்பு செய்பவர்களையும் கைவிட்டு விட்டார் என்று உணர்கிறான். அடிமைத்தனத்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு ஏசாயா இறைவாக்கினரின் பதிலானது இன்றைய நமக்குமான பதிலாகும். மக்கிற்கான பதிலானது நாம் எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும் இறைவன் நம்மோடு இருக்கிறார். நாம் கடவுளை விட்டு விலகி தூரச் சென்றாலும், அடிமைத்தனத்தை நாடினாலும், கடவுள் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மைக் கடந்து செல்வதுமில்லை. “பெற்ற தாய் தன் மகவை மறப்பாளோ, பிள்ளையைப் பெற்றெடுக்கும் தாய் மறப்பாளோ? அவ்வாறு அவள் மறந்தாலும் நான் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டேன்” என்கிறார் இறைவன் (ஏசாயா 49:15). அதுதான் இறைவனின் எல்லையற்ற அன்பு!

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

## ரமழான் சிந்தனை

### நோன்பாளிக்கான ஒழுக்கங்கள்

நோன்பு நோற்ற ஒருவர் நோன்பின் நோக்கத்தை அடைய வேண்டுமாயின் தனது உடலுறுப்புக்களை பாவமான காரியங்களிலிருந்தும் வீண் விளையாட்டுக்களை விட்டும் பேணிப் பாதுகாத்துக் கொள்வது இன்றியமையாததாகும். இதனை பல நபிமொழிகள் எடுத்தியம்பியுள்ளன.

'நோன்பு (பாவங்களிலிருந்து காக்கின்ற) கேடயம். எனவே, நோன்பாளி கெட்ட பேச்சுகளைப் பேச வேண்டாம். அறிவீனமாக நடந்துகொள்ள வேண்டாம். யாரேனும் அவருடன் சண்டைக்கு வந்தால் அல்லது ஏசினால் 'நான் நோன்பாளி' என்று இரு முறை கூறட்டும். என் உயிர் எவன் கையில் உள்ளதோ அ(ந்த இறை)வன்மேல் ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வரும் வாடை, அல்லாஹ்விடம் கஸ்தூரியின் மணத்தைவிட நறுமணமிக்கதாகும். (மேலும்) ''எனக்காகவே நோன்பாளி தமது உணவையும் பானத்தையும் ஆசையையும் கைவிடுகிறார். நோன்பு எனக்கு (மட்டுமே) உரியது. அதற்கு நானே கூலி கொடுப்பேன்' (என்று அல்லாஹ் கூறுகின்றான்) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி)

மற்றுமோர் சந்தர்ப்பத்தில், நோன்பாளி நோன்பு நோற்ற வேளை பொய் பேசுதல், தீய நடத்தையில் ஈடுபடுவதை எச்சரித்த நபி (ஸல்) அவர்கள், 'பொய்யான பேச்சையும், பொய்யான (தீய) நடவடிக்கையையும் யார் கைவிடவில்லையோ அவர் பசித்திருப்பதும், தாகமாக இருப்பதும் அல்லாஹ்வுக்குத் தேவையில்லாத ஒன்று' என்றுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி)

அதனால் எந்த இலட்சியத்தை அடைவதற்காக நோன்பு கடமையாக்கப்பட்டதோ அந்த இலட்சியத்தை மறந்து விடாது உறுதியோடு இருப்போம். நோன்பின் இலக்கை அடைய முயற்சிப்போம்

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

## 72 நாட்களில் 30 துப்பாக்கிச் சூடுகள்

21 பேர் உயிரிழப்பு;14 பேர் காயம்

2024 ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 12 வரையான 72 நாட்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 30 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் இச்சம்பவங்களில் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன் 14 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

30 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 17 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல் கும்பல்களால் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏனைய 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்க அறிவோர் ஒன்றுகூடல்

ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி இராசலட்சுமி கெங்காதரன் தலைமையில் இன்று (13 )புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “விடுகதைகள்'' என்னும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பினர் திருமதி இராஜி சடகோபன் உரை நிகழ்த்தவுள்ளார்.

# புதிய தூதுவர்கள் ஜனாதிபதியிடம் நற்சான்றுப் பத்திரங்கள் கையளிப்பு




புதிதாக நியனம் பெற்று வந்திருக்கும் தூதுவர் ஒருவரும் உயர்ஸ்தானிகரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று (12) நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர். தாய்லாந்தின் இலங்கைக்கான புதிய தூதுவராக நியமனம் பெற்றிருக்கும் பைட்டூன் மஹாபன்னபோர்ன் ( Paitoon Mahapannaporn), பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் உயர்ஸ்தானிகரான மேஜர் ஜெனரல் (Major General (R) Faheem Ul Aziz, HI (M)), ஆகியோரே இவ்வாறு நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர். வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் இதன்போது கலந்துகொண்டனர்.



வடமாகாண பிரதம செயலாளராக எல். இளங்கோவன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்

மசாலா, வாசனை திரவியங்கள்

## மீள் ஏற்றுமதிக்கான இறக்குமதியை அனுமதிக்கும் வர்த்தமானி இரத்து

(லோரன்ஸ் செல்வநாயகம்)




மிளகு, மஞ்சள், இஞ்சி உட்பட பல மசாலாப் பொருட்களை மீள் ஏற்றுமதிக்காக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் வர்த்தமானியை இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்படி இந்த வர்த்தமானியை ஆட்சேபித்ததையடுத்தே, அதை இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மீள் ஏற்றுமதிக்காக மேற்படி பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படுவது உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதிக்கும் என அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார்.

06

## கணவன், மனைவியை கடத்திச் சென்று கணவனை படுகொலை செய்த கும்பல்

யாழில் அதிர்ச்சி, கொலையாளிகள் மூவர் அடையாளம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவரை அடையாளம் கண்டுள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக்கப் பட்டுள்ளதாகவும் வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த 23 வயதான தவச்செல்வம் பவிதரன் எனும் இளைஞன், மனைவியுடன் காரைநகர் பகுதிக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்று விட்டு, வட்டுக்கோட்டை நோக்கி தனது மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளை, பொன்னாலை பாலத்துக்கருகில் இரண்டு வாகனங்களில் காத்திருந்த சுமார் 15 பேர் கொண்ட குழு கணவன் மனைவி இருவரையும் வாகனத்தில் கடத்தி சென்றனர்.

கணவனை ஒரு வாகனத்திலும், மற்றைய வாகனத்தில் மனைவியையும் கடத்தி சென்ற கும்பல், மனைவியை அராலி பகுதியில் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர். கணவனை கடத்தி சென்றவர்கள், வாகனத்தினுள் வைத்து சரமாரியாக தாக்குதல் மேற்கொண்டதுடன், வாள் வெட்டு தாக்குதலையும் மேற்கொண்டு விட்டு, வட்டுக்கோட்டை பகுதியிலுள்ள வைத்தியசாலை ஒன்றின் முன்பாக படுகாயங்களுடன் இளைஞனை வீசி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

06

## பிடிவிறாந்துக்கு அஞ்சி 14 வருடங்கள் தலைமறைவாகியிருந்தவர் கைது

மட்டக்களப்பில்,14 வருடங்களாக தலைமறைாவாகி இருந்த குற்றவாளியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.இந்நபர் தனது பெயரை மாற்றிக்கொண்டு மதம் மாறிய நிலையில் பொலன்னறுவையில் வசித்து வந்த நிலையிலேயே கைதாகியுள்ளார்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள திருப்பெருந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய இந்நபர், நாவற்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகளின் தாய் ஒருவரை திருமணம் செய்திருந்தார்.பின்னர்,மனைவியின் இரு பிள்ளைகளையும் அடித்து சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் 2009ஆம் ஆண்டு கைதாகி பிணையில் வெளிவந்திருந்தார்.

உயர் நீதிமன்றில் ஏழு வருட சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டு, திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையிலே, இவர் 14 வருடங்கள் தலைமறைவாக வாழ்ந்திருந்தார்.

## தர நிர்ணய நிறுவனங்களுக்கிடையில் இலங்கை – சீனா புரிந்துணர்வு ஒப்பந்தம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் சீனாவில் தர நிர்ணய நிர்வாக நிறுவனம் ஆகியவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில்,அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

இலங்கை மற்றும் சீனாவுக்கிடையில் தீர்வை வரியற்ற வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இதன்போது ஏற்படக் கூடிய தொழில்நுட்ப பாதிப்புக்களை மட்டுப்படுத்தும் வகையில் இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் சீனாவில் தர நிர்ணய நிர்வாக நிறுவனம் ஆகியவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்காக சட்ட மா அதிபரின் அனுமதி மற்றும் வெளிவிவகார அமைச்சினது இணக்கப்பாடும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## க.பொ.த சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தத்துக்கு விண்ணப்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சை (2023) விடைத்தாள் மதிப்பீட்டு செயற்பாடுகளுக்கான விண்ணப்பங்களை பரீட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது. இதற்கிணங்க விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்மாதம் (22) வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.அதற்கிணங்க விண்ணப்பங்களைwww.onlineexams.gov.lk/eic என்ற இணையதளத்தின் ஊடாக சமர்ப்பிக்க முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 30ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 02

**குறள் தரும் சிந்தனை**

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

பொறாமை, பேராசை, பொங்கும் கோபம், புண்படுத்தும் சொல் ஆகிய இந்த நான்கும் அற வழிக்குப் பொருந்தாதவையாகும்.

# ஐ.எம்.எப் விடயங்களில் வெளிப்படைத் தன்மை

எமது நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதாயின், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதைத் தவிர வேறு வழியே கிடையாதென்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கப் பெற்றதன் காரணமாகவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது படிப்படியாக தற்போது நீங்கி வருகின்றது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி தலைதூக்கிய காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது குறித்து அரசியல் கட்சிகள் மத்தியில் வாதப்பிரதிவாதங்கள் தோன்றியிருந்தன. ஐ.எம்.எப் உதவியை சிலர் எதிர்த்தனர். மற்றொரு தரப்பினர் ஆதரித்தனர். எனினும் ஐ.எம்.எப் உதவியைப் பெறுவதன் மூலமே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற முடியுமென்று அரசியல் முக்கியஸ்தர்கள் பலரும் இறுதியில் தீர்மானத்துக்கு வந்தனர்.

இதனையடுத்து சர்வதேச நாணய நிதியத்தை அணுகுவதில் தாமதம் நிலவியது. எமது அரசியல்வாதிகளில் பலர் வெறும் வாய்வீச்சாளர்கள் ஆவர். சர்வதேச நாணய நிதியத்தை எவ்வாறு அணுகுவதென்ற அடிப்படை அறிவே அவர்களிடம் இருக்கவில்லை. ஆனால் சர்வதேச நாணய நிதியம் குறித்து கண்டபடி மக்கள் மத்தியில் விமர்சனங்களை வெளியிட்டனர்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தை அணுகும் ஆற்றல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்தது. ஜனாதிபதி மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்கு சாத்தியமாகியது.

ஐ.எம்.எப் இன் உத்தரவாதத்தையடுத்து, அது சம்பந்தமான விபரங்கள் அனைத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் அவ்வப்போது தெரியப்படுத்தி வருகின்றார். அதேசமயம் சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் குறித்து எதிரணியினருக்கு அரசாங்கம் அவ்வப்போது தெரியப்படுத்துமென்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

ஐ.எம்.எப் முன்மொழிவுகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற வேளையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும் கலந்து கொண்டார். சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலில் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்மானங்களை எட்டுவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு இங்கு வலியுறுத்தப்பட்டது.

ஐ.எம்.எப் செயற்பாடுகள் அனைத்தையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சந்திப்பின் போது உறுதிபடத் தெரிவித்துள்ளார். இது தொடர்பான தரவு பகுப்பாய்வு அறிக்கைகள் அக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பாராளுமன்றத்துக்கும் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடுவதற்குத் தவறியிருந்தால் எமது நாட்டின் நிலைமை இன்று மிகவும் மோசமாக இருந்திருக்கும் என்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது. பொருளாதார முன்னேற்றத்தில் இலங்கை இதுவரை ஈட்டிய வெற்றியைப் பொறுத்தவரை அதன் பலன்கள் யாவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதே அரசாங்கத்தின் விருப்பமாக உள்ளது. இந்த முன்மொழிவுகளை சர்வதேச நாணய நிதியத்துடன் மேலும் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட ஏனைய எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி அழைக்கவிருக்கின்றார்.

அதேசமயம் இக்கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து, அரசாங்கம் முன்னெடுக்கும் சாதகமான மற்றும் சரியான வேலைத்திட்டத்திற்கு தமது ஆதரவை வழங்குவதாகவும் சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இந்த ஆதரவானது அரசின் திட்டங்களுக்குக் கிடைத்துள்ள வெற்றியென்பதை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

எமது நாடு தொடர்ந்தும் பொருளாதாரப் பாதிப்புக்குள் வீழ்ந்திருக்க இடமளிக்கலாகாது. இலங்கையில் மீண்டுமொரு பொருளாதாரப் பாதிப்பு உருவெடுக்குமானால் அதன் விளைவுகள் முன்னரை விட மிகவும் பாரதூரமாக இருக்குமென்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்ற திட்டங்களை சர்வதேசமே பாராட்டியிருக்கின்றது. பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டங்களுக்கு எதிரணியினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டியதும் அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

---

**கடந்த காலத்தில் இந்நாட்டில் நிலவிய பயங்கரமான பொருளாதார வீழ்ச்சியில் இருந்து ஓரளவுக்கு தலைநிமிர்ந்து நிற்கின்றோம். இது மகிழ்ச்சியான விஷயமாக இருந்தாலும், பொருளாதார நிபுணர்கள் பல்வேறு கோணங்களில் ஆராய்கிறார்கள். இதன்படி களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் எச். எம். நவரத்ன பண்டாவுடனான எமது நேர்காணல்:**



# சந்தர்ப்பவாத அரசியலை ஒதுக்கி பொருளாதார மேம்பாட்டுக்கு அனைவரும் உதவ வேண்டும்!

## களனி பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் எச்.எம். நவரத்ன பண்டா

**(1) ஏப்ரல் அல்லது மே மாதத்திற்குள் வங்குரோத்து நிலைமையிலிருந்து மீள முடியும் எனக் குறிப்பிடுகிறார்கள். அது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்குள் வங்ரோத்து நிலையை அகற்ற நாங்கள் மேற்கொண்ட வேலைத்திட்டத்தை தெரிவிப்பதே எங்களுக்கு முக்கியமானது. வங்குரோத்து நிலையைத் தவிர்க்க, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தி, வெளிநாட்டுக் கடனை அடைக்கும் நிலையை எட்ட வேண்டும். அதற்கு சுற்றுலா மற்றும் வெளிநாட்டு பணம் மூலம் நிறைய பணம் பெற வேண்டும். அல்லது ஏற்றுமதி மூலம் நிறைய வருமானம் பெற விரும்புகிறோம். அப்படி ஒரு விஷயத்தை நாம் உண்மையில் பார்க்க முடியாது இல்லையா? வங்குரோத்து நிலை நீங்கும் என்று சொல்லலாம். ஆனால் நாம் அரசியல் அறிக்கைகளை வெளியிடக் கூடாது, களத்தில் உள்ள யதார்த்தத்தைப் பற்றிப் பேச வேண்டும். நாம் 2019 நிலையை அடைந்து விட்டோமா? சுற்றுலா வளர்ச்சியடைந்ததா? நாம் வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுள்ளோமா? கையிருப்பு கணிசமாக வளர்ந்ததா? எனப் பார்க்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடனைப் பெற்றும் நாங்கள் கடனையே செலுத்தி வருகிறோம். அதனை நாம் முதலீடு செய்திருந்தால், அந்த முதலீட்டிலிருந்து வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம் மற்றும் ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்குள் நாம் வங்குரோத்து நிலையிலிருந்து வெளியேறுவோம் என்று சொல்லலாம். பொருளாதார ரீதியில் அப்படியொன்றும் பார்க்கப்படவில்லை. நமது விவசாயம் பெரிதாக வளர்ச்சியடையவில்லை. சிறிய, நடுத்தர தொழில்கள் வளர்ச்சியடையவில்லை. என்ன காரணிகளால் இவ்வாறு கூறப்பட்டது என்பதில் சிக்கல் உள்ளது. இப்போது எரிவாயு மற்றும் எரிபொருள் உள்ளது என்று ஒருவர் கூறலாம். ஆனால் இவற்றை வாங்க மக்களிடம் பணம் இல்லை. அப்படி நடந்தால், மின்கட்டணம் இவ்வளவு அதிகமாக இருக்க முடியாது. பெட்ரோல் விலை இவ்வளவு அதிகமாக இருக்க முடியாது. மக்களின் வருமானம் அதிகரிக்கவில்லை. பொருளாதார வளர்ச்சி இருந்திருந்தால், இவற்றின் விலை கீழே சென்றிருக்க வேண்டும். வாழ்வாதார நிலைமைகள் மக்களுக்கு இவ்வளவு கடினமாக இருக்க முடியாது.

**(2) பொருளாதார அபிவிருத்திக்காக அரசாங்கம் எந்தெந்தப் பிரிவுகளில் கவனம் செலுத்த வேண்டும்?**

முதலில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும். இப்போதெல்லாம் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள் என்று பேசுகிறோம். ஆனால் அது பொதுவாக வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைதான். அதாவது சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருவதில்லை. சுற்றுலாத் துறையில் நமக்கு முக்கியமானது 2019 இற்கு முன் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை. அந்த அளவுக்கு சுற்றுலாவை மேம்படுத்தினால் நல்லது. அதற்கு சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய திட்டம் நம் நாட்டில் செயல்படுத்தப்பட வேண்டும். மற்றையது, நமது நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்கள் குறித்து வெளிநாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களுடன் பேசி, சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வரும் நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவது தூதுவர்களின் கடமை. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நுகரும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவது எங்களுக்கு முக்கியம். மற்றைய விஷயம் என்னவென்றால், ஒரு சுற்றுலாப் பயணி மனநலத்தைப் பெறவே வருகிறார். இலங்கையில் மனநலம் பெறுவதற்கான வழிமுறையை உருவாக்க வேண்டும்.

அப்போதுதான் சுற்றுலாவை மேம்படுத்த முடியும். மற்றைய விடயம் என்னவென்றால், வெளிநாட்டில் வேலைக்குச் செல்லும்போது, பெரும்பாலானவர்கள் வீட்டு வேலை க்கே செல்கிறார்கள். அதற்காக நாம் முடிந்தால், திறமையான பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் அமைப்பை உருவாக்குவது மிகவும் நல்லது. வெளிநாட்டுத் தூதுவர்கள் அந்த நாடுகளில் உள்ள வேலைவாய்ப்புகள் என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கு ஏற்ற வகையில் இலங்கையில் தொழில்சார் பயிற்சித் திட்டத்தை ஆரம்பிக்க முடியும். நாம் ஒரு தொழில் பயிற்சித் திட்டத்தைத் தொடங்கும்போது, இளம் தலைமுறை (தொழிலாளர்) வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். அதன் பிறகு, பயிற்சி பெற்ற தொழிலாளர்களாக வெளிநாடுகளில் வேலைக்கு அனுப்பலாம். அப்போதுதான் வீட்டு வேலைகளை விட அதிக அளவில் அந்நியச் செலாவணியைப் பெற முடியும். மறுபுறம், தற்போதைய வற் வரியால் சிறு

**பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் அமைப்பை உருவாக்குவது அவசியம்**

மற்றும் நடுத்தர தொழில்களின் செலவு மிகவும் அதிகரித்துள்ளது. அப்போது நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலை உயரும். செலவு அதிகரித்தால், விலையைக் குறைக்க வேண்டும். விலையை உயர்த்தினால் வெளிநாட்டு சந்தையில் போட்டி போட முடியாது. போட்டிபோட வேண்டுமானால், குறைந்த செலவிலும், குறைந்த விலையிலும், வெளிநாட்டுச் சந்தையில் நம் பொருட்களை விற்க வேண்டும். அதற்குத் தேவையான அமைப்பை அரசு ஏற்படுத்த வேண்டும். எரிவாவு மற்றும் அதிகரித்த செலவுகள் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் தற்போது சரிவை சந்தித்து வருகின்றன.

உள்ளூர் விவசாயத்தை மேம்படுத்தினால் பயனுள்ளதாக இருக்கும். வற் வரி அனைத்தையும் பாதித்துள்ளது. மூலப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது, அதாவது உற்பத்தித்திறன் குறைந்துள்ளது.

**(3) மக்கள் அந்த சூழ்நிலையால் பாதிக்கப்படுகிறார்கள் இல்லையா?**

ஆம். கண்டிப்பாக. வற் அதிகரிக்கும் போது, நுகர்வோர் சிக்கலை எதிர்கொள்கிறார். பொருட்களின் விலை அதிகமாக இருப்பதால் நுகர்வை மட்டுப்படுத்தியுள்ளனர். நுகர்வைக் கட்டுப்படுத்துவது என்பது உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் அளவு குறைந்துள்ளது. அவர்களை ஊக்குவிக்கும் திட்டம் வேண்டும். அப்படியானால் இந்த நாட்டை பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்ய முடியும். அந்த விஷயங்களை ஊக்குவிக்க அரசாங்கம் மற்றொரு திட்டத்தை செயல்படுத்த வேண்டியது அவசியம்.

**உள்ளூர் விவசாயம் மேம்படுத்தப்பட வேண்டும்**

**(4) பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை வரிகளால் மட்டுமே கொண்டு வர முடியுமா?**

முடியாது, வரி விதிப்பதன் மூலம் பொருளாதாரத்தை மேலும் சுருங்கச் செய்கின்றனர். வரிகளை வசூலித்த பிறகு அதை என்ன செய்வது என்பது அடுத்த கேள்வி. உற்பத்தியாளர்களின் செலவைக் குறைக்கவும், தரத்தை அதிகரிக்கவும், வேலைவாய்ப்பின் மூலம் பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை செயல்படுத்தவும் அரசு வரிப்பணத்தை எடுத்துச் செலவு செய்தால், வரியை அதிகரிப்பதன் பலன் இன்னொரு பக்கம் சமூகத்துக்கு வரும். சில சமயங்களில் அஸ்வெசும என்று சொல்லப்படும் நிவாரணம் நிதிக்கு அரச வரவு செலவு திட்டத்திலிருநிது அதிகப் பணத்தை ஒதுக்குவதைப் பார்க்கிறோம். அப்படியானால்,அந்தப் பணத்தில் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். வேலைவாய்ப்புகளை வழங்குவதன் மூலம் மக்கள் சம்பாதித்து சாப்பிடக்கூடிய பொருளாதாரத்தை உருவாக்குவது முக்கியம்.

ஊனமுற்றோர், பார்வைக் குறைபாடு, செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு இவற்றைக் கொடுத்தால் பரவாயில்லை என்று அர்த்தம். மற்றொன்று

**சுற்றுலாத்துறையை கவரக்கூடிய திட்டம் நாட்டில் செயல்படுத்தப்பட வேண்டும்!**

70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் இருக்கலாம். அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். ஆனால் தொழில் செய்யக் கூடியவர்களுக்கு கொடுப்பதை மட்டும் எதிர்க்கிறோம். அதன் காரணமாக தினமும் சும்மா சாப்பிட பழகிக் கொள்கிறார்கள். வரிப்பணத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவது, அவர்களுக்கு உணவு கொடுப்பதை விட சிறந்தது. 1948 முதல் இன்று வரை, மக்கள் சும்மாயிருந்து சாப்பிடக் கூடிய பொருளாதாரத்தை சுமார் 75 ஆண்டுகளாக நாங்கள் செய்து வருகிறோம். எனவே 'மீனைக் கொடுக்காமல் தூண்டிலை கொடுங்கள்'. அதைத்தான் அரசு வரிப் பணத்தில் செய்ய வேண்டும். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் துரிதப்படுத்துகிறது. விதிக்கப்படும் வரியிலிருந்தும் பலன்களைப் பெறலாம்.

**(5) இலங்கையின் வரி வலைப்பின்னல் வலுவாக இருக்க வேண்டும், இல்லையா?**

வரி செலுத்துபவர்களுக்கே எப்போதும் வரி விதிக்கப்படுகிறது. ஆனால் சமூகத்தில் வரி கட்டக்கூடியவர்கள் பலர் உள்ளனர். அவர்களிடமிருந்து வரி வசூலிக்கும் வேலைத்திட்டத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடைமுறைப்படுத்தவில்லை. எனவே, வரி விதிப்பை விரிவுபடுத்த வேண்டும். வரி கட்டாத வணிக வர்க்கம் இருக்கிறது என்பது வேறு விஷயம். அந்த மக்களிடம் வரி வசூலிக்கும் திட்டத்தை உள்ளூர் வருமான வரித்துறை ஏற்படுத்த வேண்டும். பொதுவாக, ஒருவர் வரி செலுத்தவில்லை என்றால், அந்த நபர் மீது வழக்குத் தொடரப்பட்டு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் பல நிறுவனங்கள் வரி செலுத்தாமல் கடனை செலுத்துவதை பார்க்கிறோம்.

10 முதல் 15 ஆண்டுகளுக்குப் பிறகு வரிப்பணம் வசூலிக்கப்படுவது என்பது பொருளாதாரத்திற்கு எந்த நன்மையையும் அளிக்காது.

அதற்கு, ஒரு மாதத்தில் வசூலிக்க வேண்டிய வரித் தொகையை, அதே மாதத்தில் பெறும் முறையை, அரசு தயார் செய்ய வேண்டும். அப்படி நடந்தால் இந்த பொருளாதாரத்தை சரியான முறையில் பராமரிக்க முடியும். வளர்ந்த நாடுகளில், அந்த விஷயங்கள் சரியான நேரத்தில் செய்யப்படுகின்றன. அவர்கள் அந்தந்த நேரத்திலேயே பெறக்கூடிய வரியைப் பெறுகிறார்கள். அப்போது அந்தப் பணத்தை அரசு பயன்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தலாம். நம் நாட்டில் இப்படி ஒரு சம்பவம் நடக்காது. ஒரு பகுதி வரி செலுத்துகிறது. மற்றொரு பகுதி வரி ஏய்ப்பு செய்கிறது. வரி ஏய்ப்பு அதிகமாக உள்ளது. வரியை செயல்திறனாக்கினால் , பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தலாம்.

**(06) அரசாங்கத்தின் கீழ் உள்ள நிறுவனங்களை தனியார்மயமாக்குவதன் மூலம் என்ன நடக்கிறது?**

எந்த நிறுவனமும் தொடர்ந்து நஷ்டம் அடைந்து கொண்டிருந்தால், அந்த நிறுவனத்தை அரசின் கையில் வைத்திருப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது. ஏனென்றால் அதற்குக் காரணம் பொது மக்களின் வரிப்பணத்தில் பயனற்ற ஒரு அமைப்பை நடத்துவதுதான். ஆனால் அதற்கு அங்குள்ள ஊழியர்கள் பொறுப்புக் கூற வேண்டும், அரசியல் பொறுப்புக் கூறப்பட வேண்டும், அதில் உள்ள நிர்வாக அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும். அரசு நிறுவனங்கள் நஷ்டம் அடைந்தால், அதற்கான பொறுப்பு அதன் ஊழியர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களுக்குச் செல்கிறது. அவர்கள் ஏன் நஷ்டம் அடைகிறார்கள் என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். முதலில், தோல்வியடைந்தவர்களுக்கு தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்றால் தனியார் மயமாக்கப்பட்டால் பிரச்சினை இல்லை. முதலில் எந்தெந்த துறைகளில் நஷ்டம் அடைகிறீர்கள் என்று கண்டுபிடிக்க வேண்டும். சிலருக்கு தேவையற்ற சலுகைகள் கிடைக்கும். தேவையில்லாமல் பணம் பெறுகிறார்கள். இது போன்ற விஷயங்களை நிர்வகிக்க முடிந்தால் நன்றாக இருக்கும். இறுதி முடிவை எடுப்பதற்கு முன் பல விஷயங்கள் உள்ளன. அந்த விஷயங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். நஷ்டம் என்றால் என்ன, இழப்புக்கான காரணம் என்ன? தீர்வு இல்லை என்றால், தனியார்மயம் என்று சொல்வதை செயல்படுத்தலாம்.

**(8) பொருளாதார நெருக்கடி பற்றிய புரிதல் இல்லாமை பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதில் சிக்கலாக மாறுகிறதா?**

ஒவ்வொருவரும் தொடர்ந்து அரசியல் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். அரசியல் பிரகடனங்கள் இன்றி தற்போதுள்ள அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய நேர்மையாக முயற்சி செய்தால், எதிர்க்கட்சிகளும் ஏனைய கட்சிகளும் அதற்கு உதவும். ஆனால் தற்போது சந்தர்ப்பவாத காரியங்களையே அனைவரும் மேற்கொள்கிறார்கள். அவ்வாறில்லாமல் அனைவரும் நாட்டை அபிவிருத்தி செய்ய முயற்சித்தால் அனைத்து மக்களும் இணைவார்கள்.

சந்தர்ப்பவாத அரசியல் இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். அதற்கு அனைவரும் உதவுங்கள்.

நெத்மி பூஜானி ரத்நாயக்க...
தமிழில்:
வீ.ஆர்.வயலட்





# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மகளிர் தின விழா நுவரெலியா, பதுளை மாவட்டங்களில்

## கலாசார நிகழ்வுகளுடன் பெருந்திரளான மகளிர் பங்கேற்பு; கொட்டகலையில் மங்கையர் அணியும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது



இ.தொ.கா. ஊடக இணைப்பாளர் - சவரிமுத்து தேவதாஸ்

# சிறைக்கைதிகளுக்கு ரமழான் ஏற்பாடு; நோன்பு நோற்றல், துறத்தலுக்கு வசதிகள்



களுத்துறை சிறைச்சாலையில் உள்ள முஸ்லிம் கைதிகளுக்கு ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பதற்கும்,நோன்பு துறப்பதற்காகவும் தேவையான உலர் உணவுப்பொருட்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் ஜனாசா சேவை சங்கத்தின் களுத்துறை கிளை வழங்கியுள்ளது.

முஸ்லிம் வர்த்தக நிலைய தனவந்தர்களிடம் சேகரிக்கப்பட்ட பொருட்கள் அண்மையில் களுத்துறை சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன. அரிசி, பருப்பு, சீனி, பேரீச்சம்பழம் கருவாடு, டின்மீன், மா உள்ளிட்ட பல பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

பேருவளை பிரதேச சபையின் சமுர்த்தி கணக்காய்வாளரும் இச்சங்கத்தின் தலைவருமான எம். எம்.எம். சியான், மஹகொட,

பேருவளை அஹதிய்யா தலைவரும் சங்க உப தலைவருமான ரியாஸ்தீன் இமாம்தீன், பேருவளை இக்ரஃ தொழில் நுட்பக் கல்லூரி

விரிவுரையாளரும் சங்கத்தின் செயலாளருமான ரியாஸி மௌசூன், மஹகொட பேருவளை ஐ. எல். எம். சம்சுதீன்,கல்லூரியின் அஹதியா தலைவரும் இயக்கத்தின் உப தலைவருமான பீ.

உரிமையாளர் அல்ஹாஜ் இக்பால் சம்சுதீன், உதவிப் பொருளாளரான சமூக சேவை ஆர்வலர் எம். எஸ். எம். ரமீஸ் ஆகியோரும் ஜனாஸா சங்கத்தின் பெண்கள் பிரிவினரும் இதில் கலந்து கொண்டனர்.

## ஆங்கில மொழி பாடசாலைகளை...

இக்குழு கொண்டுள்ளது. மேலும், கல்வித் துறையில் தற்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமானதும், விரைவானதுமான நடவடிக்கைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

ஆசிரியர் சான்றளிப்பு முறையை நிறுவுதல், உட்பட ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்முறைகள் மற்றும் ஆசிரியர் சேவை தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்ளுதல், தொழில்முறைச் செயற்பாடுகளுக்காக ஆசிரியர்களின் தொடர்ச்சியான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய ஆசிரியர் சபையினை (National Council for Teachers) நிறுவுவதற்கான சட்டமூலம் ஒரு மாதத்திற்குள் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு, பாராளுமன்றத்திலும் சமர்பிக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் தொழிலை அங்கீகரிக்கப்பட்ட தொழிலாக மாற்றுதல், ஆசிரியர்களின் தொழில்முறை திறன்களை மேம்படுத்துதல், ஆசிரியர்களுக்கான ஒரு சரியான தொழில்முறை பாதையை வடிவமைத்தல் (professional pathway) உள்ளிட்ட சிறந்த முறையிலான தொழில்முறைக் கட்டமைப்பை உருவாக்குதல், வளர்ந்து வரும் தொழில் தரநிலைகளுக்கு ஏற்ப ஆசிரியர் சம்பளக் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் சிறந்த முறையில் சேவையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களைத் தெரிவு செய்து விருதுகளை வழங்கும் செயற்பாடுகளை மேற்படி சபை முன்னெடுக்கும்.

2000ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் 08 பாடங்களையும் ஆங்கில மொழியில் கற்பிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டிருந்த போதிலும் 24 ஆண்டுகள் ஆகியும் இன்றும் 765 பாடசாலைகளில் மட்டுமே ஆங்கில மொழியில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

ஆங்கில மொழியில் கல்வியைத் தொடர சமூகத்தில் பெரும் கேள்வி நிலவுகிறது. எனவே அதற்கான பாடசாலைகளின் எண்ணிக்கையை 1,000ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேசியக் கல்விக் கொள்கை தொடர்பிலான அமைச்சரவை உப குழு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி 2025 ஆம் ஆண்டுக்குள் குறைந்தபட்சம் 2,00,000 மாணவர்கள் ஆங்கில மொழியில் கல்வியைத் தொடர முடியும்.

இப்பணியைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்காக 2500 புதிய ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்ததுடன், இச்செயற்பாட்டினைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அறிந்து ஆங்கில மொழியில் பாடங்களைக் கற்பிக்கக்கூடிய 1,000 ஓய்வுபெற்ற ஆசிரியர்களை 03 வருட ஒப்பந்த கால அடிப்படையில் விரைவில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிவுறுத்தினார். மேலும் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆங்கில மொழியில் கற்பிக்கக்கூடிய 1,100 பட்டதாரிகளை படிப்படியாக சேவையில் இணைத்துகொள்ளுமாறும் பணிப்புரை விடுத்தார். தற்போது கல்வியற் கல்லூரிகளில் ஆங்கில மொழியில் கல்வியைப் பெற்று பட்டம் பெறவிருக்கும் 400 ஆசிரியர்களும் இதற்குள் உள்வாங்கப்படவுள்ளனர். கனிஷ்ட இடைநிலைக் கல்வி மற்றும் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து வெளியேறும் போது, பாடசாலை நற்சான்றுப் பத்திரத்திற்கு மேலதிகமாக பாடசாலையில் வெளிப்படுத்திய பல்வேறு திறன்களை அங்கீகரிப்பதற்கான எந்தவொரு உறுதிப்படுத்தல்களும் இதுவரையில் கிடைக்கவில்லை. எனவே, இவ்வருடம் முதல் அமுலாகும் வகையில், தேசியக் கல்விச் சான்றிதழ்களுக்கு மேலதிகமாக மாணவர்கள் பாடசாலை கல்வியை நிறைவுச் செய்தமைக்கான சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும். இந்தக் கூட்டத்தில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா உள்ளிட்டவர்களுடன் கல்வி துறைசார் உயர் மட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## தாமரை கோபுர உணவகத்தில்...

ரசாங்கிகா ருக்ஷானி (வயது 27) தெஹிவளையில் வசித்து வந்த சமிந்து திரங்க பெர்னாண்டோ (வயது 22) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இது பற்றி, மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

## வெஸ்லி கல்லூரியின் 150 வது ஆண்டு விழா...

இதன்போது நன்றி கூறினார். கொழும்பு வெஸ்லி கல்லூரி 1874 ஆம் ஆண்டு பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் போது மெதடிஸ்ட் மிஷனரி கல்வி முறையின் கீழ் நிறுவப்பட்டது. இக்கல்லூரி இலங்கையின் சுதந்திரப் போரின் முன்னோடிகள், ஆளுநர்கள், ஜெனரல்கள், அரசியல் தலைவர்கள், வர்த்தகர்கள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலங்கைக்குச் சேவையாற்றிய பல முக்கியஸ்தர்களை உருவாக்கியிருந்தது.

இந்த நிகழ்வில் "செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் எதிர்கால கற்பித்தல் முறைமை" என்ற தலைப்பில் கல்லூரியின் பழைய மாணவரும் ஐக்கிய அமெரிக்காவின் சென்டியோக் பல்கலைக்கழகப் பேராசிரியருமான ஆர்.சோமநாதன் சிறப்புரை ஆற்றினார்.

எல்ஸ்டன் கொக், லெனரோல் சகோரர்கள் உள்ளிட்ட பிரசித்தமான பாடகர்களின் நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றமை சிறப்பம்சமாகும். இந்த ஆண்டுப் பூர்த்தி விழாவிற்கு ஜனாதிபதியின் வருகையை அடையாளப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட விசேட நினைவு பரிசொன்றும் 150 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்பட்ட சஞ்சிகையொன்றும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டன.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகள் பெட்ரிக், இலங்கை மெதடிஸ்ட் திருச்சபையின் பிரதம பாதிரியார் எபினேசர் ஜோசப், பிரித்தானிய மெதடிஸ்ட் தேவாலயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பார்பரா ஈஸ்டன் அமையார் மற்றும் மார்ட்டின் ஈஸ்டன் கிரேட், மெதடிஸ்ட், ஆங்கிலிகன் மற்றும் பாப்டிஸ்ட் தேவாலயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மதகுருமார்கள் உட்பட மதகுருமார்கள், வண. பெர்ரி ப்ரோஹியர் உள்ளிட்ட வெஸ்லி கல்லூரியின் நிர்வாகிகள், வெஸ்லி கல்லூரி அதிபர் அவந்த பெர்னாண்டோ,ஜேர்மனிய வர்த்தகரும் அரசியல்வாதியுமான இயன் கரன் மற்றும் அவரது பாரியார், பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத் தலைவர் கெப்டன் நவீன் டி சில்வா உட்பட பழைய மாணவர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பொருளாதாரத்தை பலப்படுத்த...

சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர். "தற்போது நாம் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். கடந்த காலங்களில் விவசாய துறையும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது. தற்போது அந்நிலைமை மாறியிருக்கிறது. விவசாய அமைச்சும் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த பல வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரமும் விவசாயத் துறையும் முன்பிருந்த நிலையை விடவும் வளர்ச்சியை எட்டியுள்ளன. விவசாயம் தொடர்பில் அவதானம் செலுத்தும் போது, விவசாயிகளின் அறுவடையின் அளவை அதிகரித்துகொள்ள வேண்டியது மிக முக்கியமானது. பல மாதங்களாக விவசாயிகள் பலத்த மழை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டனர். அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும் விவசாயத்தைப் பாதித்தது. எவ்வாறாயினும், தற்போது பெரும்போக விளைச்சலின் போது 3.6 மெற்றிக் தொன் விளைச்சலைப் பெற்றுகொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. எமது நாட்டின் வருடாந்த அரிசித் தேவை 2.4 மில்லியன் மெற்றிக் தொன்களாகும். இது மகிழ்ச்சிக்குரியதாகும். சில மாகாணங்களில் சிறந்த அறுவடை கிடைக்கிறது. இந்த விளைச்சலுக்காக விவசாயிகளுக்கு தொழில்நுட்ப வசதிகளும் வழங்கப்பட்டது. எதிர்வரும் நாட்களில் வறட்சி ஏற்படக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. அதனால் நீரை முடிந்த வரையில் கவனமாக பாவனை செய்ய வேண்டியுள்ளது. சிறுபோகத்தில் 5,12,000 ஹெக்டயாரில் விளைச்சலை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம். அதற்காகவும் நீரை கவனமாகப் பயன்படுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இலங்கையை செழிப்பான வர்த்தக...

இதுவெனவும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான வரலாற்று மையமாக இலங்கை விளங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டிய பிரதமர், எமது நாட்டின் மிகப்பெரும் நன்மை இதன் மூலோபாய அமைவிடமாகும் எனக் குறிப்பிட்டார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர், "கொழும்பு துறைமுக நகரம் இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக நிலப்பரப்பை மீள்வரையறை செய்வதை நோக்கமாகக் கொண்ட பல பில்லியன் டொலர் பெறுமதி வாய்ந்த தொலைநோக்கு திட்டமாகும். இலங்கையின் தலைநகரான கொழும்பின் மையப்பகுதியை ஒட்டியதாக உருவாக்கப்பட்ட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரம், உலகப்பொதுமையான வாழ்க்கை முறை, உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு மற்றும் பேண்தகு வாழ்வியலை வழங்கும்.

"வர்த்தகத் துறைகளுக்கு புத்தாக்கங்களை உருவாக்குவதற்கான சிறந்த சூழலையும் இது வழங்குகிறது .பிராந்தியத்தில் ஒரு முக்கிய பொருளாதார மையமாக இலங்கை மாற உள்ளது, கொழும்பு துறைமுக நகரம் நிச்சயமாக அந்த செயன்முறையை துரிதப்படுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். "தெற்காசியாவுக்கான நுழைவாயில்" மற்றும் கிழக்கு மற்றும் மேற்குக்கான மத்திய மையமாக அதன் எதிர்பார்ப்புகளை மேலும் உறுதிப்படுத்தி, நாம் நடைமுறைப்படுத்தும் சீர்திருத்தங்களுடன் சந்தேகத்திற்கு இடமின்றி கொழும்பு துறைமுக நகரம் பிராந்தியத்தில் வர்த்தகத்திற்கு மிகவும் வசதியான இடமாக மாறும்." அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, பிரமித பண்டார தென்னகோன், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, சீனத் தூதுவர் கி சென்ஹொன்ங், துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் தலைவர் தினேஷ் வீரக்கொடி, துறைமுக நகர அதிகாரிகள் மற்றும் Czech Port City Pvt Ltd இன் முகாமைத்துவப் பணிப்பாளர் சியொங் ஹொன்ங்பென்ங் (Xiong Hongfeng) ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## IMF, தவிர்ந்த மாற்றுவழி...

எவ்வாறெனினும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் இன்னும் அதிகளவு பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமையவேண்டுமென தெரிவித்துள்ள அவர், அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

முன்மொழிவு தொடர்பான ஆய்வறிக்கையை தாம், ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாகவும் அதனை அவர் பெற்றுத் தருவதாக தம்மிடம் உறுதி யளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வானொலியொன்றுக்கு சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பில் வழங்கிய நேர்காணலிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை மிக முக்கியமானது. அதில் நாட்டின் வறிய மக்களின் பாதுகாப்புக்கான பல விடயங்களை நாம் உறுதிசெய்திருக்கலாம். முழுமையாக அதனது வேலைத் திட்டத்திற்கு செல்லாமல் எமது நாட்டுக்குத் தேவையான வகையில் அந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.சர்வதேச நாணய நிதியத்தின் பின்னணியின் வேலைத்திட்டத்தில் தொழில்நுட்பரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். அந்த ஆய்வு அறிக்கைகள் இல்லாத நிலையிலேயே முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன . அந்த ஆய்வறிக்கையை எமக்குப் பெற்றுத்தருமாறு நாம் கேட்டுள்ளோம். இதுதொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு நான், கொண்டுவந்துள்ளேன். அவரும் அதனைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கல்வியால் முழு நாட்டையும்...

தமிழர்களாகிய நாம், அழிக்கப்பட்ட சமூகத்தினதும், காணாமலாக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டோரதும் பிரதிநிதிகள் தான். எங்களை நோக்கி எவர் கேள்வி கேட்டாலும், இதை நாம் கூறலாம்.எண்ணிக்கையில் சிறுபான்மையினர்களாக இருந்தாலும் முழு நாட்டையும் கல்வியால் தமிழர்களுக்கு ஆட்சி செய்ய முடியும். நாங்கள் சொல்வதை இந்த நாடு கேட்கும். எங்களை இந்த நாடே திரும்பிப் பார்க்கும். அவ்வாறாயின் நாம் பொருளாதாரம், மற்றும் கல்வி ஆகிய இரண்டு துறைகளிலும் கூடுதலான கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இவ்விரு துறைகளிலும் எவரும் தொட முடியாத உச்சத்திற்கு எமது சமூகத்தை நாம் வளர்க்க வேண்டும். அவ்வாறு வளர்ந்தால் இந்த முழு நாடும் தமிழர் சொல்வதைக் கேட்கும்.

இதற்காக அனைவரும் பாடு படவேண்டும். கடந்த வருடம் உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவில் மட்டக்களப்பு மாவட்டமே, நாட்டில் முதலிடம் பெற்றிருந்தது.

இதற்காக என்னைத் தேடி வந்து நாட்டின் பிரதமர் வாழ்த்துத் தெரிவித்தார். கல்வி என்பது நாட்டின் பிரதமரையே நமது பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துவிட்டது.

பிரதமர் தினேஸ் குணவரத்தன, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு ரோயல் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர் பெரியகல்லாற்றைச் சேர்ந்தவர்தான். இப்போதும் அவர் உயிருடன் வாழ்கிறார்.

கல்வியால் வளர்ந்து, கல்வியால் அடையாளப்படுத்தப்பட்ட சமூகமே தமிழ் சமூகம் என்றும் அவர் தெரிவித்தார்.

## திருக்கோயில் மாணவன் உயிரிழப்பு...

இதனையும் மீறி போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. இதனால், மாணவனின் மரணம் தொடர்பில் கல்வியமைச்சு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக கல்வியமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா தெரிவித்துள்ளார். கடந்த 11ஆம் திகதி கிழக்கு மாகாணத்திலுள்ள திருக்கோவில் பாடசாலையொன்றில் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட 16 வயது மாணவன், திடீர் நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்திருந்தார். மாணவனின் மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், பிரேத பரிசோதனை அம்பாறை வைத்தியசாலையில் நடைபெற்றது. அதேவேளை, மரதன் ஓட்டம் போன்ற நீண்ட தூர ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு முன்னர் மாணவர்களின் உடல்நிலையை பரிசோதிப்பது அவசியம் என விசேட மருத்துவர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார். மரணத்திற்கான பல்வேறு காரணங்கள் காணப்பட்டாலும் துரதிர்ஷ்டவசமாக உடலில் நீரிழப்பு காரணமாகவும் மரணங்கள் ஏற்படலாம். நீண்ட தூரப் போட்டிகளில் பங்கேற்கும் சிறுவர்களுக்கு முறையான மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொண்டு, உடல்நிலையை உறுதி செய்த பின்னரே விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுப்ப வேண்டும். பெற்றோர்கள் இதை கருத்திற் கொள்ள வேண்டும்.

## 16 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்...

பார்த்தால் மேலே குறிப்பிடப்பட்டவர்களின் ஒட்டுமொத்த சொத்துக்களை விடவும் அதிகமான சொத்துக்களை கொண்ட உலகின் பெரும்பணக்கார பெண்ணாக திகழ்ந்திருக்கிறார் சீனாவின் பேரரசி வூ.

வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களின் படி பேரரசி வூ, தாம், வாழ்ந்த சகாப்தத்தின் பணக்காரப் பெண்ணாக கருதப்படுகிறார். சில வரலாற்றாசிரியர்கள் இதுவரை வாழ்ந்தவர்களிலேயே பெரும் பணக்காரப் பெண் என்றால், வூதான் என்று குறிப்பிடுகின்றனர்..

பேரரசி வூவின் மொத்த சொத்து மதிப்பு 16 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, எலான் மஸ்க், ஜெஃப் பெசோஸ், முகேஷ் அம்பானி போன்ற பெரும் பணக்காரர்களின் மொத்த சொத்து மதிப்பை சேர்த்தாலும் பேரரசி வூ வின் சொத்துக்கு நிகராகப்போவதில்லை. அதாவது எலான் மஸ்கின் 229 பில்லியன் அமெரிக்க டொலர்கள், ஜெஃப் பெசோஸ் 174 பில்லியன் டொலர்கள் மற்றும் சுமார் 106.2 பில்லியன் டொலர் சொத்து மதிப்புள்ள முகேஷ் அம்பானி ஆகியோரின் சொத்து மதிப்பை முறியடித்துள்ளது .

டாங் வம்சத்தைச் சேர்ந்த பேரரசி வூ, ஒரு புத்திசாலி ஆட்சியாளர் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். தனது ஆட்சி மற்றும் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள பல்வேறு உத்திகளை இவர், கையாண்டதாகவும் கூறப்படுகிறது. மேலும் தனது பதவியைப் பாதுகாக்க தனது சொந்த குழந்தைகளை நாடு கடத்துவது போன்ற கடுமையான நடவடிக்கைகளை பேரரசிவூ மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

பேரரசி வூ ஏறக்குறைய 15 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அந்த காலக்கட்டத்தில் சீனப் பேரரசு மத்திய ஆசியாவில் விரிவடைந்தது. அவரது ஆட்சியின் கீழ், சீனப் பொருளாதாரம் செழித்த வளர்ந்ததுடன், தேயிலை மற்றும் பட்டு வர்த்தகத்தில் கணிசமான வளர்ச்சியைக் கண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கணவன், மனைவியை...

இளைஞனை மீட்ட வைத்தியசாலை பணியாளர்கள் , யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அதேவேளை அராலி பகுதியில் இறக்கிவிடப்பட்ட மனைவி அங்கிருந்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தன்னையும், தனது கணவரையும் இரு வாகனங்களில் கடத்தி சென்றதாக முறைப்பாடு செய்துள்ளார். கடத்தல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டை பொலிஸார், கடத்தலில் ஈடுபட்ட மூவரை அடையாளம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதேவேளை, படுகொலை சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மீன் ஏற்றுமதிக்கான...

வாசனைத்திரவிய வர்த்தக நடவடிக்கைகளில் முதலிடம் வகிக்கும் இலங்கையின் வாசனைப் பொருட்களின் தரத்தில்,மீள் இறக்குமதிகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.இவ்விடயங்களை கவனத்திற் கொண்டு ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

# இன்றைய பலன்கள்

(13.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. கூட்டுத் தொழிலை விரிவு படுத்த ஆலோசிப்பீர்கள். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள்.

**ரிஷபம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் படிப்படியான முன்னேற்றத்தை காண்பார்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற முடியாவிட்டாலும் கைவசம் உள்ள பணிகளில் கவனம் செலுத்தி கை நிறைய பொருள் ஈட்டுவர்

**மிதுனம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்துவர். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளுடன் கருத்து வேறுபாடு இன்றி செயல்பட்டால் தான் வெற்றி பெற முடியும்.

**கடகம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. மாணவர்கள் படிப்பில் அக்கறை காட்ட வேண்டிய நேரம் இது. கூட்டத் தொழில் செய்பவர்கள் செய்யும் காரியங்கள் அனைத்தும் வெற்றியாக முடியும்.

**சிம்மம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. கூட்டுத் தொழில் வியாபாரம் ஓரளவு மும்முறமாக நடைபெறுவதைக் கண்டு மனமகிழீர்கள். எனினும் பணப்புழக்கம் கணக்கு வழக்குகளில் எச்சரிக்கை தேவை.

**கன்னி:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. வேலைப்பளு அதிகரித்தாலும் அதற்கேற்ற வருவாய் வந்து சேரும். கூட்டுத் தொழில் வியாபாரம் நல்ல முறையில் நடைபெறும்.

**துலாம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. குடும்பத்தில் சிறு சிக்கல்கள் தோன்றி மனதை அலைக்கழிக்கும். தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள்.

**விருச்சிகம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. கலைஞர்களின் முயற்சியில் சிலருக்கு புதிய வாய்ப்புகளோடு வருமானத்திற்கான வழியும் சிறப்பாக அமையும். பெண்கள் எல்லா வகையிலும் திருப்தியான போக்கை காண்பார்கள்.

**தனுசு:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. தொழில் செய்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். வேலை இல்லாமல் இருந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும்.

**மகரம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. வருமானம் இருந்தாலும் வேலையில் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டியது அவசியம். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொண்டிருப்பர்.

**கும்பம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை தேடிச் செல்வர். இருப்பினும் பழைய வாய்ப்புகளாலும் வருமானம் கிடைக்கும். மாணவர்கள் வரவேற்கத்தக்க அளவுக்கு படிப்பில் ஈடுபாடு காட்டுவர்.

**மீனம்:** சதுர்த்தி விரதம் விநாயகர் வழிபாடு செய்க. பணிகளை விரைந்து முடித்து வாடிக்கையாளர்களின் பாராட்டை பெறுவீர்கள் மாணவர்கள் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் காணப்படுவார்கள்.

## IMF உடன் கலந்துரையாட...

இந்நிலையில் இக்கட்சிகளுக்கு மீண்டும் கலந்துகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதில் பங்கேற்றிருந்த எம்.ஏ.சுமந்திரன் எம்,பி,

சர்வதேச நாணய நிதியத்தின் தொழிலுட்ப மதிப்பாய்வு அறிக்கையை சமர்ப்பிக்குமாதறு கோரியிருந்தார்.

இந்த அறிக்கையை வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டது. இதனை எதிர்க்கட்சிகளுக்கு அனுப்பி வைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

## முன்னேற்றும் இலக்குக்கு...

விதிமுறைகளுக்கிணங்க நலன்புரி கொடுப்பனவுகள் திட்டத்தை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்த 2023 ஏப்ரல் 17 இல், அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அஸ்வெசும பயனாளர் குடும்பங்களை மூன்று வருடங்களுக்குள் பொருளாதார சமூக மற்றும் உளரீதியாகவும் சக்திப்படுத்தும் நோக்கிற்காக இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தில் முதற்கட்டமாக நாட்டில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக தெரிவு செய்யப்பட்ட 16 ஆயிரம் குடும்பங்கள் நன்மையடையும். ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றின் நிதியுதவி மற்றும் தேசிய ரீதியில் நிதியையும் இணைத்துக் கொண்டு இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## இறக்குமதியாகும்...

தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால்மாவிற்கு 100 ரூபாவிலிருந்து 150 ரூபா வரை விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய மீனவர்களின் விடுதலையை...

நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு அவரது கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.தமிழக முதல்வரின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தொடர்ச்சியாக இடம்பெறும் கைதுகளால், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

தமிழக மீனவர்களின் குடும்ப நலன் கருதி அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுப்பது அவசியம். கைதான தமிழக மீனவர்கள் 22 பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் (22) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.இவர்களை அவசரமாக விடுவிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் தமிழக முதல்வரின் கடுதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொருளாதார நெருக்கடி பாதிப்பு;...

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், மேற்படி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பானிய அரசாங்கம் 1600 மில்லியன் ஜப்பான் யென்னை (3.3 பில்லியன் ரூபா) வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

கடற்கரைபகுதி அபிவிருத்தி வடக்கு உள்ளிட்ட பிரதான வைத்தியசாலைகளின் தாய் சேய் சிகிச்சை உபகரணங்களை பெற்றுக் கொள்ளுதல், வடக்கு – கிழக்கு மீனவர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்களை பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கும் இந்நிதி உபயோகப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பானிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## எச்சரிக்கை மட்டத்தை விடவும்...

சுகாதார அமைச்சு கேட்டுள்ளது. குறிப்பாக சிறுவர்,குழந்தைகள், முதியவர், நோயாளர் ஆகியோர் தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை,மேல், வடமேல், தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் அநுராதபுரம், மன்னார், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் வெப்பநிலை தொடர்ந்தும் அதிகரித்து காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளில் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ளவர்கள் போதுமானளவு தண்ணீர் அருந்துமாறும், நிழலான பகுதிகளில் முடிந்தவரை ஓய்வெடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது.

முதியவர் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களை வீட்டில் வைத்து கவனித்துக் கொள்ளுமாறும், சிறு குழந்தைகளை தனியாக வாகனங்களில் ஏற்றிச் செல்ல வேண்டாமெனவும் பொதுமக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

# அமைச்சரவை முடிவுகள்





**01.வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தில் (NSBM) மருத்துவக் கல்லூரியை தாபித்தல்;**

அரசுக்குச் சொந்தமான முழுமையான சுயாதீனமான நிதி ஈட்டும் நிறுவனமான வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தில் (NSBM) கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை மருத்துவ பேரவையின் நேரடிக் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலின் கீழ் மருத்துவ பீடத்தை தாபிப்பதற்கும் MBBS பட்டத்தை வழங்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

குறித்த பட்டப்படிப்புக்காக வருடாந்தம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் 500 பேரை இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஹோமாகம தள மருத்துவமனை குறித்த சிகிச்சைப் பயிற்சியை வழங்குவதற்காக பொருத்தமான அரச மருத்துவமனையாக ஒதுக்கிக் கொள்வதற்காக NSBM நிறுவகம் அனுமதி கோரியுள்ளது.ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவர்களின் சிகிச்சைப் பயிற்சிக்காக ஹோமாகம தள மருத்துவமனையைப் பயன்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் தற்போது வழங்கப்பட்டிருப்பதால், அதற்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் NSBM நிறுவகத்தின் மருத்துவபீட மாணவர்களுக்கு சிகிச்சைப் பயிற்சிகளுடன் பேராசிரியர் அலகு வசதிகளுக்காக வளங்களைப் பகிர்ந்து கொள்வதன் அடிப்படையில் ஹோமாகம தள மருத்துவமனையை ஒதுக்கி வழங்குவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ள மருத்துவக் கல்வித் தரநியம கட்டளைகளுக்கு ஏற்புடையவாறு ஹோமாகம தள மருத்துவமனையின் அபிவிருத்திக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு (NSBM) நிறுவகம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

**02. அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகள் உத்தேசத் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுகின்ற குடும்பங்களை வலுவூட்டும் வேலைத்திட்டம்;**

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நலன்புரி நன்மைகளைச் செலுத்தும் உத்தேச முறையொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்காக 2023.04.17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகள் உத்தேசத் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுகின்ற குடும்பங்கள் 03 வருடங்களில் பொருளாதார, சமூக மற்றும் உளரீதியாக வலுவூட்டும் நோக்கில் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் 16,000 பயனாளிக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி நிதியனுசரணை மற்றும் உள்நாட்டு நிதி வசதி மூலம் முன்னோடிக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும், குறித்த முன்னோடிக் கருத்திட்டத்தின் பெறுபேறுகளின் அடிப்படையில் அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அடையாளங் காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை.

**03. இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனம் மற்றும் சீனாவின் தர நியம நிர்வாகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்;**

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இறக்குமதி வரியல்லாத வர்த்தகத்தின் போது மேலெழுகின்ற தொழிநுட்ப ரீதியான தடைகளைக் குறைப்பதற்காக இலங்கை தரக்கட்டளை நிறுவனம் மற்றும் சீனாவின் தரநியம நிர்வாகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

**04. நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணித்துண்டை சுகாதாரம் மற்றும் அது தொடர்பான செயற்பாட்டு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக குத்தகை அடிப்படையில் விடுவித்தல்;**

நாரஹேன்பிட்டி, கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணித்துண்டை சுகாதாரம் மற்றும் அதுதொடர்பான செயற்பாட்டு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக 50 வருடகாலத்திற்கு குத்தகை அடிப்படையில் கையளிப்பதற்காக போட்டித்தன்மையான முதலீட்டு முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகளைப் பகுப்பாய்வின் பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவின் விதந்துரையின் பிரகாரம், 0.1929 ஹெக்ரெயார் காணித்துண்டை, நைன்வெல்ஸ் ஹொஸ்பிட்டல் பிறைவெட் லிமிட்டட் மற்றும் எக்சஸ் இன்ரநெஷனல் பிறைவெட் லிமிட்டட் நிறுவனத்துடன் கூட்டிணைக்கப்பட்ட l M/s NW Reality (Pvt) Ltd இற்கு 50 வருடகால குத்தகை அடிப்படையில் கையளிப்பதற்காக யோசனை முன்வைப்பு.

**05. நிர்மாணித்தல், உரித்துக் கொள்ளல் மற்றும் நடைமுறைப் படுத்தல் அடிப்படையில் நிலப்பரப்பில் நிறுவப்படும் மிதப்பு சூரிய மின்கல வோல்ட் மின்னுற்பத்தி நிலையத்தை அமைத்தல்;**

மாத்தறை (10 மெகா வாற்று) மற்றும் வவுணதீவு (08 மெகா வாற்று) உப மின்கட்டமைப்பு நிலையங்களுக்காக சூரிய மின்கல வோல்ட் மின்னுற்பத்தி நிலையத்தின் மூலம் மின்சாரத்தை விநியோகிப்பதற்கு சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, கிடைக்கப்பெற்ற கருத்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவின் விதந்துரையின் பிரகாரம், நிர்மாணித்தல், உரித்துக் கொள்ளல் மற்றும் நடைமுறைப்படுத்தல் அடிப்படையில் நிலப்பரப்பில் நிறுவப்படும் மிதப்பு சூரிய மின்கல வோல்ட் மின்னுற்பத்தி நிலையத்தை வழங்குவதற்கான யோசனைக்கு அங்கீகாரம்.

**06. நிர்மாணித்தல், உரித்துக் கொள்ளல் மற்றும் நடைமுறைப் படுத்தல் அடிப்படையில் 100 மெகாவாற்று, மட்டக்களப்பு சூரிய மின்னுற்பத்தி கருத்திட்டத்தை நிர்மாணித்தல்;**

மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொழிநுட்பத்துடன் 50 மெகா வாற்று அல்லது அதற்கு அதிகமான இயலளவுடன் கூடிய மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அபிவிருத்திக்காக விருப்புக்கூற்று கோரல்களைப் பெறுவதற்கு 2021.08.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சமர்ப்பிக்கப்பட்டுள்ள விருப்புக் கூற்றுக்களைக் கருத்தில் கொண்டு, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவின் விதந்துரையின் பிரகாரம், 20 வருடங்களுக்கு தொழிற்பாட்டுக் காலப்பகுதிக்காக நிர்மாணித்தல், உரித்துக் கொள்ளல் மற்றும் நடைமுறைப்படுத்தல் அடிப்படையில் மட்டக்களப்பு ஒட்டமாவடிப் பிரதேசத்தில் 100 மெகா வாற்று சூரிய மின்னுற்பத்திக் கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கான யோசனைக்கு அங்கீகாரம்.

**07. 1969 ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் தர நியமம் மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளை வெளியிடல்;**

தேசிய பொருளாதாரம், பொதுச் சுகாதாரம் மற்றும் சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கில் இயைபு முறைக் குறியீடு (HS code) 217 இன் கீழ் வகைப்படுத்தப்படுத்தப்பட்ட 122 பண்டங்கள் இறக்குமதி செய்யும் போது தரநியமம் மற்றும் தரக்கட்டுப்பாட்டை நிறுவுவதற்காக 1969 ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கமைய 2017 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு (தர நியமம் மற்றும் தரக்கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

துரிதமானதும், பாதுகாப்பானதும், பயனுள்ள வகையிலான வர்த்தகப் போக்குவரத்திற்கான வசதிகளை வழங்கல் மற்றும் உள்ளூர் உற்பத்தி மற்றும் இறக்குமதி உற்பத்திகளுக்கான நியாயமான வாய்ப்புக்களை சான்றுப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டின் தரநியமங்கள் பற்றிய ஒழுங்குவிதிகளில் தற்போது காணப்படுகின்ற தரநியமங்கள் மற்றும் தர அளவுகோல்களை திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

இப்பின்னணியில் இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனம் அரச நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனம் உள்ளிட்ட பிரதான பங்காளர்களுடன் கலந்துரையாடி, தற்போது காணப்படுகின்ற தரநியமங்கள் மற்றும் தர அளவுகோல்களைத் திருத்தம் செய்து ஒழுங்கு விதிகளை வெளியிட நடவடிக்கை.

**08. ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 1,600 மில்லியன் ஜப்பான் யென் நிதியுதவியை ஜப்பான் அரசின் மூலம் வழங்கல்;**

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிப்புக்குள்ளாகிய சமூகங்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கல் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக அரச துறையை வலுவூட்டுவதன் மூலம் ஜப்பான் அரசு தனது ஒத்துழைப்புக்களை விரிவாக்கம் செய்துள்ளது.

அதற்கமைய, ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கீழ்வரும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆயிரத்து அறுநூறு மில்லியன் யென்களை (அண்ணளவாக 3.3 பில்லியன் ரூபாய்கள்) வழங்குவதற்கு ஜப்பான் அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

i. இலங்கை கடலோரப் பாதுகாப்பு படையணியில் எண்ணெய்க் கசிவுகளுக்கான பதிலளிப்புக்கள் மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் திட்டம்

ii. வடமாகாணத்தின் பிரதான மருத்துவமனைகளில் தாய்சேய் மற்றும் மகப்பேற்றுச் சிகிச்சைகளுக்கான துணைக்கருவிகள் விநியோகம் மற்றும் வட மாகாணத்தின் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆடைக் கைத்தொழில் பாடநெறிகளுக்கான துணைக்கருவிகள் வழங்கும் திட்டம்

iii. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீனவர்களின் பாதுகாப்புக்கான துணைக்கருவி உபகரணங்கள் வழங்கும் திட்டம்

அதற்கமைய, மேற்படி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நன்கொடை அளிப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஜப்பான அரசுடன் பரிமாற்றப் பத்திரம் மற்றும் ஏனைய ஏற்புடைய ஆவணங்களில் கையொப்பமிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. பால்நிலை சமத்துவம் தொடர்பான சட்டமூலம்;**

பால்நிலைச் சமத்துவம் தொடர்பான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2022.09.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய தயாரிக்கப்பட்டுள்ள பால்நிலை சமத்துவம் தொடர்பான சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை.

# முந்தல் பிரதேச செயலக புதிய கட்டடம் பிரதமரால் திறந்துவைப்பு







**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தை, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான தினேஷ் குணவர்தன மக்கள் பாவனைக்காக நேற்று (12) உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம். எஸ்.பி. ஹேரத் மற்றும் முந்தல் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம். எஸ்.பி.டபிள்யூ.ரி.எம்.எஸ்.பி. மல்வில ஆகியோரின் இணைத் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 93 மில்லியன் ரூபா செலவில் முந்தல் பிரதேச செயலகத்திற்கான மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான அசோக பியந்த, அருந்திக்க பெர்னாண்டோ, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் உட்பட உயர் அதிகாரிகள், வடமேல் மாகாண ஆளுநர் லஷ்மன் யாப்பா அபேவர்தன உட்பட புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ். பி. ஹேரத் உட்பட பிரதேச செயலாளர்கள், அரச திணைக்கள பிரதானிகள், முப்படையின் பிரதானிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# க.பொ.த சா/த பரீட்சை; விடைத்தாள் மதிப்பீட்டுக்கான விண்ணப்பம் கோரல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு செயற்பாடுகளுக்கான விண்ணப்பங்களை பரீட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இம்மாதம் 22 ஆம் திகதி வரை அதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கிணங்க விண்ணப்பங்களை www.onlineexams.gov.lk/eic என்ற இணையதளத்தின் ஊடாக சமர்ப்பிக்க முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1984ஆம் ஆண்டு தமது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறிய மாணவர்களது ஒன்றுகூடல் அண்மையில் கலைப்பீட வளாகத்தில் நடைபெற்றது.(படம்: அக்குறணை குறூப் நிருபர்)


தேசிய லொத்தர் சபை National Lotteries Board
திங்கள் 2024.03.11
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5416 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,945,820.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 7 7 0 6 6 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3658 — சீட்டிழுப்பு திகதி 2024.03.11 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,374,791.36
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 57 68 70 80 — விசேட எழுத்து N — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 18124

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1764 — 2024.03.11 — 23018 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 426,788,830.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 02 — வெற்றி இலக்கங்கள் 29 50 67 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.03.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0242
ஆங்கில எழுத்து O — L7 எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 6 5 5 9 9 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 26,658,935.40

ராசி சுப பலன் — திகதி 2024.03.11 — சீட்டிழுப்பு இலக்கம் 725 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,212,446.60
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 28 38 39 48 — தனயோக இலக்கம் 37178 — நாளுக்கான விதி எண் 12

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1446 — 2024.03.11 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,585,323.84
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 67 75 78 80 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 40223



## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**

**BID No.: 013/T/2024**

**SUPPLY OF CCTV FOR NEW APRON MONITORING AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE**

**Supply of CCTV for New Apron Monitoring at Bandaranaike International Airport, Katunayake** என்பதற்காக வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக எட்டாயிரம் ரூபாவை (8,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.03.13 ஆம் திகதியிலிருந்து 2024.04.02 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2024 ஏப்ரல் 3 ஆம் திகதியன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கு (450,000 இ. ரூபா) நிகரான விலைமனுப் பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264103/011-2264106 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# கிழக்கின் குரல்



# தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் பதவிக்கு ஏழு பேர் விண்ணப்பம்

**திராய்க்கேணி தினகரன், பாலமுனை தினகரன் நிருபர்கள்**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தர் பதவிக்கு ஏழு பேர் விண்ணப்பித்துள்ளனர். தற்போதைய உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப்.ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம்.றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம்.ஜுனைடீன், பேராசிரியர் எம்.வி.எம்.இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம்.முஸாதிக், கலாநிதி ஏ.சி.எம்.ஹனஸ் ஆகியோரே இதற்காக விண்ணப்பித்துள்ளனர்.





தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தற்போதைய உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது மூன்றாண்டு பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவை சார்பாக பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் விண்ணப்பத்துக்கான அழைப்பை கடந்த பெப்ரவரி 8ஆம் திகதி விடுத்திருந்தார்.

இந்நிலையில் புதிய உபவேந்தர், பல்கலைக்கழக பேரவையின் விசேட ஒன்றுகூடலினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் (Criteria) கீழ் பேரவை உறுப்பினர்கள் புள்ளிகள் இட்டு, அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் மூவரை தெரிவு செய்வர். இந்த மூவரில் ஒருவரை உபவேந்தராக ஜனாதிபதி நியமிப்பார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இம்முறை தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசார், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்துள்ளமை விசேட அம்சமாகும். கடந்த 2021.08. 08ஆம் திகதி பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் 5ஆவது உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது விண்ணப்பித்துள்ள ஏழு பேரில் ஒருவரே ஆறாவது உபவேந்தராக நியமிக்கப்படவுள்ளார்.

# நீச்சல் பயிற்சியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்

**பாலமுனை விசேட, ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்**

நீச்சல் மற்றும் உயிர்காப்பு பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் மூவ் கல்குடா டைவர்ஸ் அமைப்பால் இலவசமாக இப்பயிற்சிநெறி அக்கரைப்பற்று தேசிய பாடசாலை நீச்சல் தடாகத்தில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாக கலந்துகொண்டு, இப்பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.



இப்பயிற்சிநெறியை பூர்த்தி செய்த பாலமுனை இளைஞர்கள் சபை உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்களாகிய 60 பேருக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அண்மைக்காலம் முதல் கடல் உட்பட நீர்நிலைகளில் மூழ்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வரும் நிலையில் இப்பயிற்சிநெறி மிகவும் முக்கியமானதாக உள்ளது.

# அனர்த்த அபாய குறைப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்



**ஒலுவில் விசேட நிருபர்**

அனர்த்த அபாயத்தை குறைக்கும் வேலைத்திட்டங்கள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் அனர்த்த முகாமைத்துவக் கற்கையை பூர்த்தி செய்த தொண்டர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (11) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"அனர்த்த அபாய குறைப்பு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை அம்பாறை மாவட்டத்தில் வினைத்திறனுடன் கொண்டு முன்னெடுப்பதற்காக சுமார் 300 க்கும் மேற்பட்ட பயிற்றுவிப்பாளர்கள் சகல பிரதேச செயலகங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நிலையான அபிவிருத்தியுடன் அனர்த்த குறைப்பு செயற்றிட்டத்தை கிராமங்கள் தோறும் முன்னெடுக்க அனர்த்த முகாமைத்துவ தொண்டர் குழுக்களை வழிப்படுத்தும் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அனர்த்தம் தொடர்பாக முதலில் அதிகாரிகள் அறிந்திருந்தாலே மக்களுக்கு உரியநேரத்தில் உரிய தகவல்களை வழங்க முடியும். நாம் அனைவரும் பிரதேசத்தின் அனர்த்த பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்" என்றார்.



மூதூர் பிரதேசத்தில் பெண்களின் சுயதொழில் நடவடிக்கையை முன்னேற்றும் நோக்கில் நெசவு உற்பத்தி பயிற்சிநெறி அண்மையில் அங்கு நடத்தப்பட்டது.
(தோப்பூர் தினகரன் நிருபர்)

# காத்தான்குடியில் பேரீச்சம் பழங்கள் பகிர்ந்தளிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

புனித ரமழான் மாதத்தையிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கி வைக்கப்பட்ட ஒருதொகை பேரீச்சம் பழங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (11) காத்தான்குடி மீரா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் வைத்து ஏனைய பள்ளிவாசல்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

காத்தான்குடி மற்றும் அதனை அண்டியுள்ள இடங்களில் அமைந்துள்ளதும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டதுமான 59 பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம் பழங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிலையில் பள்ளிவாசலொன்றுக்கு 20 கிலோகிராம் படி பேரீச்சம் பழங்கள் வழங்கி வைக்கப்பட்டதாக, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பிராந்திய அலுவலக பொறுப்பதிகாரி எம்.ஏ.எம். சியாட் தெரிவித்தார்.



பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் இப்பேரீச்சம் பழங்கள் வழங்கி வைக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

# சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தவருக்கு அபராதம்

**தோப்பூர் குறூப் நிருபர்**

சட்டவிரோத மதுபானம் அடங்கிய 420 போத்தல்கள் மற்றும் மதுபானம் வடிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் வைத்திருந்த ஒருவருக்கு மூதூர் நீதவான் நீதிமன்றம் 250,000 ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

திருகோணமலையின் ஈச்சிலம்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த இந்நபர், சட்டவிரோத மதுபானம் மற்றும் மதுபானம் வடிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் வைத்திருந்தமையால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்நபரை நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (12) முன்னிலைப்படுத்திய போதே, அந்நபருக்கு எதிராக இந்த அபராதம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

# உப்புக்காச்சிமடு பள்ளிவாசலுக்கு ஒலிபெருக்கி சாதனம் அன்பளிப்பு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூரின் உப்புக்காச்சிமடு பள்ளிவாசலில் அவசியத் தேவையாக இருந்த ஒலிபெருக்கி உள்ளிட்ட சாதனத்தொகுதியை அப்பள்ளிவாசலுக்கு மூதூர் வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (11) வழங்கியுள்ளார்.

பள்ளிவாசல் சமய நிகழ்வுகளை ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதற்கு ஒலிபெருக்கி வசதி இல்லாமை தொடர்பாக உரிய வர்த்தகருக்கு பள்ளிவாசல் நிர்வாக சபையினர் தெரியப்படுத்தினர். இதனை அடுத்து தனது சொந்த நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஒலிபெருக்கி அடங்கலான சாதனத் தொகுதியை பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் அவ்வர்த்தகர் வழங்கி வைத்துள்ளார்.

# புனித ரமழான் மாத உலருணவு கிண்ணியாவில் வழங்கல்

**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியாவின் நடுஊற்று பிரதேசத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் புனித ரமழான் மாதத்தையிட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ( 11) வழங்கி வைக்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச் .எம்.கனி தலைமையில் REDCO நிறுவனத்தின் அனுசரணையுடன் உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய 266 பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

REDCO நிறுவனத் தலைவர் முகமட் அஷார் மற்றும் அந்நிறுவன உத்தியோகத்தர்கள், நடுஊற்று கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

# கல்வியில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு

எருவிலில் நிகழ்வு



**மணல்சேனை நிருபர்**

கல்வியில் சாதனை படைத்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஸ்தாபகத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் எருவில் கிளைத் தலைவருமான அ.வசிகரன் தலைமையில் எருவில் சிக்கனச் சேமிப்பு கடனுதவி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது எருவில் பிரதேசத்தைச் சேர்ந்த 34 மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். கடந்த வருடம் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் அதிகூடிய சித்தி பெற்ற மாணவர்களும் தமிழ்த் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களுமே பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

# தென்எருவில்பற்றில் சித்த வைத்திய முகாம்



**துறைநீலாவணை நிருபர்**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மகளிருக்கான 'பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாம்' நேற்று முன்தினம் திங்கட்கிழமை (11) அப்பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் எண்ணக்கரு மற்றும் வழிகாட்டுதலுக்கமைய மகளிர் தின நிகழ்வுகள் நடத்தப்பட்டதுடன், இதன் ஓரங்கமாக இவ்வைத்திய முகாம் நடத்தப்பட்டது.

இவ்வைத்திய முகாமில் சோதிடரும் பாரம்பரிய சித்த வைத்தியருமான கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் கலந்துகொண்டு பாரம்பரிய மூலிகைகள் மற்றும் சித்த வைத்தியம் தொடர்பான ஆலோசனை வழங்கினார்.

இரு கட்டங்களாக நடைபெற்ற இவ்வைத்திய முகாமில் அலுவலக உத்தியோகத்தர்களும் சமுர்த்தி சமுதாய அடிப்படை சங்கங்களின் உறுப்பினர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

அம்பாறையில்

# பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம் பழங்கள் வழங்கிவைப்பு



அம்பாறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹானின் ஒருங்கிணைப்பிலும் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.சுபைதீனின் தலைமையிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்ஆ பள்ளிவாசல் செயலாளர் ஏ.எல். எம்.மன்சூர் கலந்துகொண்டார்.

சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.றசீது, ஏனைய பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்களாகிய பலரும் கலந்து சிறப்பித்தனர்.

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

# அம்பாறையில் புதிய திட்டமிடல் பணிப்பாளர்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைச் சேர்ந்த எம்.ஏ. முனாஸீர் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமையை அம்பாறை மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (11) மாவட்டச் செயலாளர் சிந்தக அபேயவிக்ரம முன்னிலையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண சபையின் மாகாணத் திட்டமிடல் செயலகத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளராக சுமார் 15 வருடங்களாக அவர் கடமையாற்றி பதவி உயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறந்த ஆளுமை கொண்ட அவர், அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி திட்டமிடலில் முதுமாணி பட்டம் பெற்றவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

# வடபகுதி பிரதேச வைத்தியசாலைகளின் பௌதிக வளங்களை மேம்படுத்துவது அவசியம்

யாழ்.விசேட நிருபர்



வடக்கில் பிரதேச வைத்தியசாலைகளில் பௌதிக வளங்களை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கான புதிய நோயாளர் விடுதி கட்டடம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸின் தலைமையில் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணத்தின் சுகாதாரத் துறையை கட்டியெழுப்புவதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நோயாளர்களை அதிகரித்து சுகாதாரத் துறையை வீழ்ச்சியடைய செய்ய தான் ஒருபோதும் விரும்பவில்லை. தற்கால உணவு பழக்கவழக்கம் உள்ளிட்ட செயற்பாடுகளால் ஏற்படக்கூடிய நோய்களை தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கிராமிய, பிரதேச வைத்தியசாலைகளுக்கு தேவையான மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை வடக்கு மாகாணத்தில் காணப்படுகிறது.

மேலும் இளவாலை கிராமத்திற்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பும் எனக்கு உள்ளது.

இந்த விடயங்களை கருத்திற் கொண்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்.

அத்துடன் இளவாலை கிராம அபிவிருத்திக்காக செயற்படும் வருத்தப்படாத வாலிபர் சங்கம் மற்றும் நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர்கள், அதிகாரிகள், நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வடக்கின் உதயம்

# பட்டப்பகலில் யானை தாக்கியதில் ஒருவர் பலி

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்



முல்லைத்தீவில் யானை தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு அம்பகாமம் பழைய கண்டி வீதி பகுதியில் பகல் வேளை வீதியால் சென்றுக் கொண்டிருந்த நபரை யானை தாக்கி பற்றைக்குள் வீசியுள்ளது.

கரிப்பட்டமுறிப்பு அம்பகாமத்தைச் சேர்ந்த முத்துத்தம்பி கிருஷ்ணசாமி என்ற 62 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சடலத்தை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுச் சென்று பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். கரிப்பட்டமுறிப்பு, அம்பகாமம், ஒலுமடு உள்ளிட்ட பகுதிகளில் பகல் வேளைகளில் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் விவசாயிகள் வீதிகளில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

யானைகளின் தாக்குதலால' தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# வவுனியாவில் கட்டாக்காலி மாடுகள் நகரசபையால் பிடிப்பு!

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதிகளில் நடமாடித் திரிந்த 8 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு வவுனியா நகரசபை வளாகத்தில் அடைக்கப்பட்டது.

நேற்று அதிகாலை வவுனியா பண்டாரிக்குளம், வைரவர் புளியங்குளம், மற்றும் நகரமத்தி ஆகிய பகுதிகளிலிருந்து கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

மாடுகளின் உரிமையாளர்கள் 2 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தை நகரசபைக்கு செலுத்தி அவற்றை மீளவும் பெற்றுக் கொள்ளமுடியும் என நகரசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர் கலாசாலையில் தமிழக உளவியலாளர் சரண்யா உரை



இந்தியத் துணைத்தூதரகத்தின் ஆதரவுடன் தமிழகத்தின் பிரபல செயலூக்கப் பேச்சாளர் முனைவர் சரண்யா ஜெய்குமார் பங்கேற்ற செயலூக்க உரை அண்மையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது. கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடக்கவுரையை இலங்கை கல்வி அபிவிருத்தி குழுமத்தின் இணைப்பாளர் லண்டனைச் சேர்ந்த பொறியியலாளர் இணுவிலூர் நடராசா சச்சிதானந்தம் ஆற்றினார். நிறைவுரையை லண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் சிவாப்பிள்ளை ஆற்றினார். நிகழ்வில் தற்கால மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கையாளவேண்டிய உத்திகள் என்ற தொனிப்பொருளில் முனைவர் சரண்யா ஜெய்குமார் உரையாற்றினார்.

# 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்

## கிளிநொச்சியில் மகளிர் தினம் அனுஷ்டிப்பு

பரந்தன் குறூப் நிருபர்



கிளிநொச்சியில் 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாது ஒழிப்போம்' எனும் தொனிப்பொருளில் வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டணியின் ஏற்பாட்டில் மகளிர் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டிணைவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்றலிலிருந்து எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு கிளிநொச்சி பசுமை பூங்காவளாகத்தைச் சென்றடைந்து அங்கே நிகழ்வுகள் நடைபெற்றன. வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் பெண்களமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## மலைச்சாரல்



# இலங்கை பைத்துல் மால் நிதியத்தினால் நோன்பு கால உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



பெண்கள் வலுவூட்டல் அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கை பைத்துல் மால் நிதியத்தினால் நோன்பு கால உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு கண்டி கட்டுகஸ் தோட்டை சாஹிராக் கல்லூரியில் பெண்கள் வலுவூட்டல் அமைப்பின் தலைவி பாத்திமா ரியாஸா தலைமையில் நடைபெற்றது. இதில் ரூ. 7500 பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. பெருஎண்ணிக்கையிலான விதவைத்தாய்மார்கள் கலந்து கொண்டு உலருணவுப்பொதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

# ஜெயிலானியில் கிரிக்கெட் போட்டி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



ஜெயிலானி தேசிய பாடசாலையில் தரம் 10 மற்றும் 11 வகுப்பு மாணவர்களுடனான கிரிக்கெட் போட்டிகளில் மாணவர் அணிகளை தோற்கடித்து பாடசாலை ஆசிரியர் அணியும் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு அணிகளும் வெற்றியீட்டின.

முதலில் நடைபெற்ற தரம் 10 மாணவர் அணி ஆசிரியர் அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆசிரியர் அணி 65 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மாணவர் அணி 64 ஓட்டங்களை பெற்றது.

இதனையடுத்து தரம் 11 அணியுடன் நடைபெற்ற போட்டியில் ஆசிரியர் அணி 75 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மாணவர் அணி 69 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில் துடுப்பாட்டம், பந்து வீச்சு ஆகிய துறைகளில் இரண்டு போட்டிகளிலும் திறமை காட்டிய ஆசிரியர் வீ.அஜித் முதல் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் போட்டி தொடரின் சிறந்த வீரராகவும் தெரிவானார்.

இவருக்கான பணப்பரிசு ஆசிரியர் குழாம் சார்பில் எம்.எஸ்.எம்.மபாஸ் ஆசிரியர் வழங்கினார். இரண்டாவது போட்டியின் இறுதி ஓவரில் திறமையாக வந்து வீசிய ஏ.ஏ.எம். பாசி ஆசிரியர் திறமையாக பந்து வீசி எதிரணியின் வெற்றி வாய்ப்பை சிதறடித்தார்.

இதனையடுத்து நடைபெற்ற தரம் 11 மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு அணிகளுக்கிடையிலான போட்டியில் நிறைவேற்றுக் குழு அணி 93 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மாணவர் அணி 89 ஓட்டங்களைப் பெற்றது.

# ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலில் பங்குனி உத்திர மஹோற்சவம்

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

கண்டி நகரில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவில் "மத்திய கைலாசம்" ஸ்ரீ மீனாட்சி அம்பிகை உடனுறை ஸ்ரீ சோமசுந்தரேஸ்வர சுவாமிகளின் பங்குனி உத்திர மஹோற்ஷவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும். அன்று பூர்வ பட்ச சஷ்டி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் மிதுன லக்னமும் சித்த யோகமும் சேர்ந்து வரும் காலை 9.21 மணிமுதல் 10.46 மணிவரை வரும் சுபவேளையில் துவஜா ரோகணம், (கொடியேற்றம்) நடைபெற திருவருள் பாலித்துள்ளது.15.03.2024 முதல் 23.03.2024 வரை தினமும் காலை 6.00 மணிக்கு விஷேட பூஜை நடைபெறவுள்ளது. 23.03.2024 காலை 6.00 மணிக்கு பால்குட பவனி நடைபெறும். மாலை 6.00மணி முதல் விஷேட ரதோற்சவ வசந்த மண்டப பூஜையுடன் சுவாமிகள் உள்வீதி உலா வந்து 7.30 மணிக்கு மேல் பஞ்சமூர்த்திகளும், பஞ்சரதங்களில் எழுந்தருளி வரும் இரதபவனி நடைபெறும்.

# கர்ப்பிணி தாய்மாருக்கு பொருட்கள்

ஊவா சுழற்சி நிருபர்

மகாவலி அதிகார சபையின் ஒருங்கிணைப்புடன் 100 விவசாய குடும்பங்களுக்கு ரூ. 40 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டதுடன் 100 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தேவையான பொருளுதவியும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது.

6. மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இலக்கம் 041-2283275ஐ அழைத்து அல்லது www.akuressaps.lk இணையதளத்திற்கு பிரவேசித்து பதிவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம். கொடுப்பனவு விடயங்கள் Online மூலம் மேற்கொள்வதாயின் பற்றுச் சீட்டை சமர்பித்தல் வேண்டும்.
   (கணக்கு இல. 117100157906567)

**செயலாளர்,**
**பிரதேச சபை - அக்குரஸ்ஸ.**

**பெறுகைக் குழு,**
**பிரதேச சபை - அக்குரஸ்ஸ**

---

# கட்டான பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

கட்டான பிரதேச சபைக்கு பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கள் கட்டான பிரதேச சபையினால் வழங்கப்படும் மாதிரியிலேயே சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. ரூ.500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி விண்ணபத்தை மற்றும் அறிவுறுத்தல் பத்திரங்களை தலைமையகத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.
04. பெறுகை ஆவணங்கள் விநியோகித்தல் 2024 மார்ச் 22ம் திகதி பி.ப.2.00 வரை இடம்பெறுவதுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2024 மார்ச் 258 மு.ப.10.00 இற்கு முடிவுறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
05. உங்களது கேள்வி ஆவணங்களை செயலாளர், கட்டான பிரதேச சபை, தெமங்ஹந்திய என்ற முகவரிக்கு அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.
06. சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**செயலாளர் மற்றும் கட்டான பிரதேச சபையின் அதிகாரம்,**
**செயற்பாடுகள் அமுல்படுத்தும் அதிகாரி,**
**கட்டான பிரதேச சபை,**
**தெமங்ஹந்திய**

---

# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## நலன்புரி நன்மைகள் சபை

### பதவி வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு செயற்றிட்டத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியும் அனுபவமும் உள்ள இலங்கை பிரஜைகளிடம் 2024.03.13 இலிருந்து 2024.03.26 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**குறிப்பு :** மேற்கண்ட பதவிகள் தொடர்பான தகுதிகள் மற்றும் விசாரணை நியதிகள் (Terms of reference) பின்வரும் இணையதளங்களுக்குச் சென்று பெறலாம்.

**https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies/section/current%20vacancies**

**https://www.wbb.gov.lk/web/si/jobs**

**செயலாளர்**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,**
**கொழும்பு -01**

---

**நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**

# DI ஆள்செல்லும் துவார மூடிகள் மற்றும் DI மேற்பரப்பு பெட்டிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக உற்பத்தியாளர்களின் முன்தகைமை

**முன்தகைமை ஆவண இல.: PQ/DI MANHOLE & DI SURFBOX/NWSDB/2024/01**

## அழைப்புக் கடிதம்

1. முன்தகைமையுள்ள உற்பத்தியாளர்களின் பட்டியலொன்றை பேணுவதற்காக DI Manhole Covers and DI Surface Boxes ஆகியவற்றை வழங்குவதற்காக உற்பத்தியாளர்களை முன்தகைமையாக்குவதற்கு இலங்கை, இரத்மலான, காலி வீதி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது உத்தேசிக்கின்றது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் உரித்தான நியமங்களுக்கு அமைவாக இருக்கும் உற்பத்தியாளர்களிடமிருந்து DI Manhole Covers and DI Surface Boxes ஆகியவற்றை பெறுவதற்காக உத்தேசிக்கின்றது.
2. முன்தகைமையாளர்களின் பட்டியலானது இறுதி வடிவம் பெற்றபின் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது DI Manhole Covers and DI Surface Boxes ஆகியவற்றின் பெறுகைக்காக முன்தகைமை பெற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து மாத்திரமே அடுத்துவரும் 2 வருடங்களுக்கு விலைமனுக்களை அழைக்கும். இந்த உற்பத்தியாளர்கள் NWSDB இன் தேவைப்பாடுகளை பேணுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு 2 வருடங்களுக்கும் உற்பத்தியாளர்கள் கணக்காய்வு செய்யப்படுவார்கள்.

   விண்ணப்பதாரியானவர் DI Manhole Covers and DI Surface Boxes ஆகியவற்றின் முக்கியமான உற்பத்தியாளர்களாக கருதப்படுவர்.

   விதித்துரைக்கப்பட்ட தகைமைகளுக்கு அவர்களின் அனுபவம், தொழில்நுட்ப ஆற்றல் மற்றும் நிதிசார் கொள்ளளவை காட்சிப்படுத்தும் உற்பத்தியாளர்களுக்கு முன்தகைமையானது திறக்கப்படும்.
3. **ஆவணத்தை கையேற்றல் மற்றும் சமர்ப்பித்தல்:**

   ஆர்வமுள்ள உற்பத்தியாளர்கள் மேலதிக தகவலை பெற்று முன்தகைமை ஆவணங்களை இலவசமாக பின்வரும் முகவரியிலுள்ள கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கான உதவி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கலாம்.

   **அலுவலக முகவரி:** **கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் கிளை**
   **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**
   **காலி வீதி, இரத்மலான, இலங்கை.**

   **தொலைபேசி இல.:** **94-011-2605328/2638999 நீடிப்பு: 1750**

   **தொலைநகல் இலக்கம்** **94-011-2635885**

   **மின்னஞ்சல்:** **agmtenders@waterboard.lk**

   விண்ணப்பதாரிகள் முழுமையான முன்தகைமை ஆவணத்தை மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பத்தாயிரம் இலங்கை ரூபாவை (10,000 இ.ரூபா) மற்றும் ஏற்புடையதான பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர் வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொள்வனவு செய்யலாம்.

   தபால் மூலம் அனுப்பப்படும் கோரிக்கைகள் இரத்மலான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரின் பெயரில் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள தொகைக்கு இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான வங்கி வரைவையும் அடக்கியிருத்தல் வேண்டும். முன்தகைமை ஆவணமானது இரு பிரதிகளில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, என முகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்ட தபாலுறைகளில் பதிவுத் தபாலில் திருப்பி அனுப்பப்படல் வேண்டும் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

   **உதவி பொது முகாமையாளர் (கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள்),**
   **கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு,**
   **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை,**
   **காலி வீதி, இரத்மலான.**

   ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை வருடம் முழுவதும் எந்த நேரத்திலும் சமர்ப்பிக்கலாம்.
4. விண்ணப்பங்களை முத்திரையிடுதல் மற்றும் அடையாளமிடுதல்:

   விண்ணப்பதாரியானவர் ஒவ்வொரு தனியான விண்ணபத்தின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியவற்றை தனித்தனியான தபாலுறைகளில் (இது முதற்கொண்டு உள்ளக தபாலுறைகள் என அழைக்கப்படும்) 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என பொருந்தும் தன்மையில் அடையாளமிடப்பட்டு அதன் பின்னர் அவைகளை வெளியக தபாலுறையொன்றில் சேர்த்து அத்துடன் முத்திரையிடப்படல் வேண்டும்.

   உள்ளக மற்றும் வெளியக தபாலுறைகள் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்.

   - கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, காலி வீதி, இரத்மலான.
   - விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் அடையாள இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடுதல்.

விண்ணப்பதாரிகள் தொழில் வழங்குநரினால், எழுத்தில் தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான திகதியிற்கு 90 நாட்களுள் அவர்களின் விண்ணப்பங்களின் பெறுபேறு மற்றும் முன்தகைமை விண்ணப்பதாரிகளின் பெயர்கள் ஆகியவற்றிற்கான அறிவுரையை வழங்குவார்.

முன்தகைமை செயற்பாடு இரத்துச் செய்து பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித கடப்பாட்டையும் சுமத்தாமல் அல்லது NWSDB இன் செயற்பாட்டிற்கான காரணத்தை விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்காமல் இருப்பதற்கான உரிமையை NWSDB கொண்டுள்ளது.

NWSDB இன் முன்தகைமையில் ஏற்கனவே பட்டியலிடப்பட்ட உற்பத்தியாளர்கள் புதியதொரு விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு தேவையில்லை.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**

---

## திருத்தப்பட்ட விலைமனுக்களுக்கான அழைத்தல்

# வட மேல் மாகாண சபை

# மாகாண கல்வித் திணைக்களம்

2024.03.01 ஆம் திகதியன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட 01/2024 என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கை கடிதத்திற்கமைவாக 2024.02.28 ஆம் திகதியன்று தினகரன் பத்திரிகையின் 15 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக, தேவைப்படும் CIDA தரம் (கட்டிடங்கள்) மற்றும் புளொக் இல. 4,5 ஆகியன பின்வருமாறு திருத்தப்படல் வேண்டுமென்பதுடன் முன்பு பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் ஏனைய அனைத்து விபரங்களில் எவ்வித மாற்றமுமில்லை என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

| தொ இல. | விலைமனு குறிப்பீட்டு இல. | ஒப்பந்த தலைப்பு | பிரதேச பொறியியலாளரின் அலுவலகம் | தேவைப் படும் CIDA தரம் (கட்டி டங்கள்) | ஒப்பந்தக் காலம் (நாட்களில்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூ) | விலை மனுவின் செல்லபடியாகும் காலப்பகுதி | விலைமனுப் பிணைத் தொகை (ரூ) | விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | **23/E/Wen/ MOE/ NCB/ 15** | வென்னப்புவ ஜோசப் வாஸ் கல்லூரியில் 110 'x30' அளவுள்ள மூன்று மாடி வகுப்பறைக் கட்டிட நிருமாணம் - I ஆம் கட்டம் | வென்னப்புவ | சி-5 மற்றும் சி-4 மாத்திரம் | 180 | 12,500 | 91 | 338,000 | 2024 ஜுலை 31 ஆம் திகதியன்று வரையும் |
| 02. | **23/E/Kuli/ MOE/ NCB/ 16** | பிங்கிரிய, வயம்ப தேசிய கல்வி கல்லூரியில் வேலி, உணவகம், நடைபாதை, கராஜ் மற்றும் நீர் தாங்கி ஆகியவற்றின் அவசியமான பழுதுபார்த்தல்கள் | குளியாப்பிட்டிய | சி-8 மற்றும் சி-7 மாத்திரம் | 90 | 3500 | 63 | 29,200 | 2024 ஜுலை 03 ஆம் திகதியன்று வரையும் |
| 03. | **23/E/Kuli/ MOE/ NCB/17** | பிங்கிரிய, வயம்ப தேசிய கல்வி கல்லூரியின் விடுதி கட்டிடங்களின் அவசியமான பழுதுபார்த்தல்கள் | குளியாப்பிட்டிய | சி-6 மற்றும் சி-5 மாத்திரம் | 90 | 3500 | 77 | 108,000 | 2024 ஜுலை 17 ஆம் திகதியன்று வரையும் |
| 04. | **23/E/Kuru/ MOE/ NCB/18** | தம்பதெனிய தேசிய கல்வி கல்லூரியின் கும்புக் கிணற்றின் பழுதுபார்த்தல்கள் | குருநாகல் | சி-9 மற்றும் சி-8 மாத்திரம் | 30 | 1000 | 49 | 3800 | 2024 ஜுன் 19 ஆம் திகதியன்று வரையும் |
| 05. | **23/E/Kuli/ MOE/ NCB/19** | கிரி/ விக்கிரமஷிலா தேசிய பாடசாலையில் 29.25x19.15மீ அளவுள்ள மூன்று மாடி வகுப்பறையை சாதாரண (FF) மற்றும் நூலகம் (SF) ஆகியவற்றின் நிருமாணம் (மீதி வேலை) | குளியாப்பிட்டிய | சி-5 மற்றும் சி-4 மாத்திரம் | 210 | 12,500 | 91 | 265,000 | 2024 ஜுலை 31 ஆம் திகதியன்று வரையும் |
| 06. | **23/E/ Kuru/ MOE/ NCB/20** | நாரம்மல மயுரபாத மத்திய கல்லூரியில் விடுதி கட்டிடங்கள், உயர்தர வகுப்பறை கட்டிடம், உயர்தர ஆய்வுகூடம், 7 ஆம் தர மண்டபம், 6 ஆம் தர மண்டபம் மற்றும் அழகியல் அலகு மற்றும் 70'x25' அளவுள்ள வகுப்பறைக் கட்டிடம் ஆகியவற்றின் பழுதுபார்த்தல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | குருநாகல் | சி-6 மற்றும் சி-5 மாத்திரம் | 150 | 3500 | 77 | 100,000 | 2024 ஜுலை 17 ஆம் திகதியன்று வரையும் |
| 07. | **23/E/Kuli/ MOE/ NCB/21** | கிரியுல்ல விக்கிரமஷிலா தேசிய பாடசாலையின் கட்டிடங்களின் பழுதுபார்த்தல்கள் | குளியாப்பிட்டிய | சி-7 மற்றும் சி-6 மாத்திரம் | 105 | 3500 | 77 | 53,000 | 2024 ஜுலை 17 ஆம் திகதியன்று வரையும் |

4. 2024 ஏப்ரல் 02 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கணக்கியல் கிளையிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. 2024 ஏப்ரல் 03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்களம் (வட மேல் மாகாணம்), பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டியில்'' சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024 ஏப்ரல் 03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு.

**J.A.M.P. Jayathilake,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வட மேல் மாகாணம்),**
**கண்டி வீதி,**
**குருநாகல்.**
**தொலைபேசி இல.: 0372223211**
**திகதி: 13.03.2024.**

---

Daily News Classifieds, the Housewives' companion

# "பிரிட்டிஷ் கவுன்சிலின் பாடசாலைகள் இப்போது!" தென்னாபிரிக்காவில் நடைபெற்ற கண்காட்சி

"பிரிட்டிஷ் கவுன்சிலின் பாடசாலைகள் இப்போது!" கண்காட்சி 2024 பிப்ரவரி 27 முதல் 29 வரை தென்னாபிரிக்காவின் கேப் டவுனில் மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 1000க்கும் மேற்பட்ட பள்ளித் தலைவர்கள் நேரடியாகவும் மற்றும் மெய்நிகராகவும் கலந்து கொண்டனர், மேலும் சர்வதேசக் கல்வியில் சிறந்த நடைமுறைகள் மற்றும் நுண்ணறிவுகளைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு தளமாகவும் இது செயல்பட்டது. இலங்கையில் இருந்து, பிரிட்டிஷ் கவுன்சில், எலிசபெத் மோயர் பள்ளி, புனித தோமஸ் கத்தோலிக்க சர்வதேச கல்லூரி, மற்றும் பெண்கள் கல்லூரி உள்ளிட்ட பாடசாலைகளின் 4 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

டிஜிட்டல் கற்றல், தலைமைத்துவம், நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உள்ளடக்கிய கருப்பொருள்கள், சிறந்த சர்வதேசமயமாக்கப்பட்ட மற்றும் சூழல்சார்ந்த பாடத்திட்டத்தில் சேர்கின்றன. தொடர்ச்சியான ஈடுபாட்டுடன் கூடிய முக்கிய அமர்வுகள், அதிவேகப் பட்டறைகள் மற்றும் குழு விவாதங்கள் மூலம், பிரதிநிதிகள் புதுமையான கற்பித்தல் அணுகுமுறைகள், பாடத்திட்ட செறிவூட்டல் உத்திகள் மற்றும் கல்வியில் தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை ஆராய்ந்தனர்.

பிரிட்டிஷ் கவுன்சிலின் குளோபல் எக்ஸாம்ஸ் சர்வீசஸ் தலைவர் மார்ட்டின் லோடர், 'இப்போது




பள்ளிகளின் மிக முக்கிய அம்சம், சர்வதேச கல்வியில் நுண்ணறிவு மற்றும் புதுமைகளை ஆராய்வதன் மூலம் கல்விச் சமூகத்திற்குள் உலகளாவிய தொடர்புகளை ஏற்படுத்துவதாகும். வளர்ந்து வரும் கருப்பொருள்களை எடுத்துரைப்பதன் மூலம், மாறிவரும் கல்வி நிலப்பரப்பின் சிக்கல்களை வழிநடத்தவும், மாணவர்களுக்கு நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தவும் கல்வியாளர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்' என்று கூறினார்.

# தங்கப் பதக்கம் வென்றுள்ள Multilac



National Chamber of Exports ஏற்றுமதி விருது வழங்கல் 2024, இரசாயன ஏற்றுமதி தொழில் பிரிவில் Multilac தங்கப் பதக்கம் வென்றுள்ளது. உலகலாவிய பெயிண்ட் (paint) துறையில் இலங்கையை சந்தைப்படுத்துவதில் முன்னணியில் இருக்கும் மல்டிலக்கின் பங்களிப்பை இந்த பெறுமதிமிக்க கௌரவம் எடுத்துக் காட்டுகின்றது.

இதன் தரம், புத்தாக்கம் மற்றும் நிலைபேறான தன்மை ஆகியவற்றில் குழுமத்தின் அர்ப்பணிப்புகளுக்கு முகாமைத்துவம் நன்றி தெரிவிக்கின்றது. குழுமத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சிமர் மில்பர் உள்ளிட்ட மல்டிலக் பிரமுகர்கள் வெற்றி மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கின்றனர்.

# மகளிர்தினத்தை 1000 பெண்சாரதிகள்கொண்ட வலையமைப்புடன் கொண்டாடிய Pick Me



2023இல் தங்கள் தளத்தில் பெண்களின் ஈடுபாடு இரட்டிப்பாகியுள்ளதுடன் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக Pick Me நிறுவனம் தெரிவிக்கின்றது.

சவாரிகளை தவிர்த்து நிறுவனம், பெண் தொழில்முனைவோருக்கு Pick Me உணவு மற்றும் சந்தைத் தளத்தில் வாய்ப்புக்களை வழங்குகிறது. இதில் ஏற்கனவே நூற்றுக்கும் மேற்பட்ட பெண் வணிகர்கள் இணைந்துள்ளனர்.

மாறி வரும் தொழில் துறை சூழல் வழங்கும் நெகிழ்வுத் தன்மையான வேலை நேரங்கள் தமது வலையமைப்புடன் பெண்கள் இணைவதில் முக்கிய காரணியாக இருப்பதாக PickMe தெரிவிக்கின்றது.

2024ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினம் குறித்துப் பேசுகையில், Pick Meஇன் நிறுவனர்/ தலைமை நிர்வாக அதிகாரியான ஜிப்ரி ஸுல்பர், "பெண்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான பொதுவான வழிமுறைகளைத் தாண்டி, குறிப்பாக இக்கடுமையான பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு, மிகவும் அர்த்தமுள்ள வழிகளைத் தேடிக் கண்டறிவதில் நிறுவனம் ஆர்வமாக உள்ளது." என்றார்.

அதிகமான மக்கள் தங்கள் வாகனங்களை வீட்டிலேயே விட்டு விட்டு சவாரி சேவைகளின் மதிப்பையறிந்து பயன்படுத்துவதால் Pick Me அவர்களின் தினசரி அசைவு எண்ணிக்கையை ஒரு மில்லியன் வரை கொண்டு செல்ல முடியும் என கருதுகிறது. "இதனால் போக்குவரத்துத் தீர்வுகளுக்காக எங்கள் தளத்தைப் பயன்படுத்துபவர்களின் குறித்த தேவைகளை ஆதரிப்பதற்காக எங்கள் செயலியில் புதிய சேவைகளை விரைவில் ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். மேலும் பெண் சாரதிகள், சவாரித் தளத்தில் அவர்களுக்கென பிரத்தியேக ஆதரவுத் திட்டங்களை விரைவில் பெறுவார்கள்." என்றார்.

இந்த எண்ணக்கருவுடன் PickMe, இலங்கை சமூகப் பொலிஸ் பிரிவுடன் இணைந்து 2024ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடியது.

# NDB வங்கியின் "ப்ரிவிலேஜ் ஜூனியர் சேமிப்பு" அறிமுகம்

தனித்துவம் மிக்க சலுகைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் முன்னோடியாகத் திகழும் NDB வங்கி அதன் சமீபத்திய சிறுவர்களுக்குச் சிறப்புச் சலுகைகளை வழங்கும் புதுமைமிகு சேமிப்பு திட்டமான "பிரிவிலேஜ் ஜூனியர் சேமிப்பினை" [Privilege Junior Savings] அறிமுகப்படுத்துகிறது. இந்த பிரத்தியேக சலுகைகளைக்




கொண்ட சேமிப்பு திட்டமானது, உயர் நிகர மதிப்புள்ள தனிநபர்களின் குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இது இளவயதிலிருந்தே சிறுவர்கள் மத்தியில் நிதி தொடர்பான ஆளுமையினை ஊக்குவிப்பதற்கான வங்கியின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

பிறந்து ஒரு நாள் தொடக்கம் 18 வயது வரை உள்ள இலங்கையில் வசிக்கும் சிறுவர்களுக்காக கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ள சிறப்புச் சலுகைகளை வழங்கும் பிரிவிலேட்ஜ் ஜூனியர் சேமிப்புத் திட்டம் என்பது, சிறுவர்களின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப சேவைகளை வழங்குவதில் வங்கியின் அர்ப்பணிப்புக் குச் சான்றாக உள்ளது.

NDB பிரதம நிறைவேற்று அதிகாரி கெலும் எதிரிசிங்க இந்த சிறப்புச் சலுகை சேமிப்பு திட்டம் தொடர்பாகத் தெரிவிக்கையில் "NDB பிரிவிலேஜ் ஜூனியர் சேமிப்பு ஆனது பாதுகாப்பான மற்றும் வளமான எதிர்காலத்திற்கான அடித்தளமாக விளங்குகிறது" என்று குறிப்பிட்டார்.

அவர்களின் பயணம் முழுவதும் பிரத்தியேகமான நலன்களை வழங்கும் அதே வேளையில் பொறுப்பான நிதியியல் பழக்கங்களை மேம்படுத்துவதையும் வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது.

# GSMA Chairman விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட டயலொக், ஆசிஆட்டாவின் ஹான்ஸ் விஜயசூரிய

ஆசிஆட்டா குழுமம் பெர்ஹாட் தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் குழும நிர்வாக இயக்குனர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, அண்மையில் ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் இடம்பெற்ற உலக அலைபேசி பேராயத்தில் (Mobile World Congress) GSMA Chairman விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். Chairman விருது என்பது GSMAவின் உச்சபட்ச கௌரவத்திற்குரிய விருதாகும்.

கலாநிதி விஜயசூரிய GSMA சபையில் ஆசிஆட்டா குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். இதுவே உலகளாவிய அலைபேசி துறையை நிர்வகிக்கிறது. ஆசியா முழுவதும் 170 மில்லியன் சந்தாதாரர்களுக்கான சேவையை வழங்கும் தொழிற்பாடுகளுடன் ஆசியாவின் பாரிய தொலைத் தொடர்பாடல் குழுமங்களில் ஒன்றாக ஆசிஆட்டா திகழ்கிறது.



கலாநிதி விஜயசூரிய தொலைத் தொடர்பாடல் வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக தனது தலைமையின் கீழ் மலேசியா, இந்தோனேஷியா, கம்போடியா, இலங்கை ஆகிய நாடுகளில் ஆசிஆட்டாவின் டிஜிட்டல் தொடர்பாடல் தொழிற்பாடுகளை கண்காணிக்கிறார்.

டயலொக் உட்பட ஆசிஆட்டா குழுமத்தின் கம்பனிகளை தொழிற்படுத்தி வரும் இவர், ஆசியா முழுவதும் அலைபேசி தொடர்பாடலின் அதிநவீன வசதிகளையும் செல்வாக்கையும் மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக முன்னின்று உழைக்கின்றார்.

கலாநிதி விஜயசூரிய 1997 முதல் 2016 வரையான காலப்பகுதியில் டயலொக்கின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றினார். 2016இல் அவர் டயலொக்கில் பணியாற்றிய காலத்தில் GSMAவானது கலாநிதி விஜயசூரியவுக்கு ஆசிய அலைபேசி துறைக்காற்றிய அளப்பரிய பங்கு ('Outstanding Contribution to Asian Mobile Industry') எனும் விருதை வழங்கி கௌரவித்தது.


## பெறுகை அறிவித்தல்

### அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு - (NCB)**

**இறக்குமதிகள்**

கீழுள்ள பொருட்களின் வழங்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடம் இருந்து அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன, பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கோப்புக் குறிப்பு | அளவு (மெ./தொ) | உருப்படி | விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|---|
| SPC/SUP/FI/001/2024/11 | 450 (±5%) | சுருள்களில் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அச்சு காகிதத்தின் பெறுகை / 750mm / 70(±2.5%) gsm | 1,800,000.00 |

1. தேசிய போட்டி ரீதியான விலைமனு (இறக்குமதி) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்திற்கான தகுதிக்கு பின்வரும் தகைமை அளவுகோல்களை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
   a. உற்பத்தியாளரின் அங்கீகாரம்/ அட்டோர்னி தத்துவத்தின் மூலம் நிறுவனத்தின் அந்தஸ்தை உறுதி செய்தல்.
   b. செல்லுபடியான வர்த்தகப் பதிவு
3. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் 2024.03.22 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும்.
4. மீளளிக்கப்படாத கட்டணமாக தொகுதி ஒன்றுக்கு 5,000 ரூபாவை செலுத்தி 2024.03.13 ஆம் திகதி தொடக்கம் 2024.04.02ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் பாதுக்க, பனலுவ, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், வழங்கல்கள் முகாமையாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
5. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்புகளை குறிப்பிட்டு 2024.04.03 ஆம் திகதி பி.ப. 2.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பனாலுவ, பாதுக்க என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது பாதுக்க, பனாலுவ, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் உள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.
6. விலைமனு மூடப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்காட்டி தினங்கள் வரை விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
7. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன, தலைவருக்கு செலுத்த முடியுமான, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாத வடிவத்தில் அல்லது ரொக்கப்பணத்தில் கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணை ஒன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி/ தொலைநகல் இலக்கத்தில் வழங்கல் முகாமையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்**
**பனாலுவ, பாதுக்க**
**2024.03.12**

SPC



## மெதகம பிரதேச சபை

### பெறுகை அறிவித்தல்

மெதகம பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2024.04.01 முதல் 2024.02.30 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடல் பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

- பெறுகை விண்ணப்பங்கள் விநியோகித்தல் : 2024.03.13 முதல் 2024.03.27 பி.ப.12.30 வரை
- பெறுகை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் : 2024.03.27 பி.ப.1.30 வரை
- பெறுகை விண்ணப்பங்கள் திறத்தல் : 2024.03.27 பி.ப.2.00 இற்கு

பெறுகை விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் போது தமது அடையாள அட்டை/சாரதி அனுமதி பத்திரம்/ கடவுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டியதுடன், பதிவை உறுதிபடுத்துவதற்காக அண்மையில் பெற்றுக்கொண்ட கிராமசேவை சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். இச் சபையுடன் ஏற்படுத்திக்கொண்ட குத்தகை உடன்படிக்கையை மீறியுள்ள அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு பெறுகை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்று பெயரிட்டு வேறுவேறாக சிறிய இரு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரே உறையில் இட்டு அவ் உறையை பொறியிட்டு "சபை செயலாளர், மெதகம பிரதேச சபை, மெதகம" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப முடிவதுடன், கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின் சபையில் வைக்கப்பட்டுள்ள பெறுகை பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பெறுகை விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் குத்தகைக்கு பெறுவதற்கு எதிர்ப்பார்க்கும் சொத்தின் பெயரைக் குறிப்பிட்டு வாடகைக்கு பெறுவதற்கான விலைமனுக்களை சமர்ப்பித்தல் என்று குறிப்பிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

சித்திகரமான பெறுகைதாரரை தேர்ந்தெடுக்கப்படும் வேளையிலேயே பாதுகாப்பு பிணை வைப்பாக பெறுகையின் முழுமையான பெறுமதியில் 3/12 ஐச் செலுத்தி அன்றே ஒப்பந்தத்தில் கையொப்பமிடல் வேண்டும். அன்றே ஒப்பந்தத்தில் கையொப்பம் இடப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்படும் பெறுகைப்பிணை வைப்புத்தொகையை சபைக்குரியதாக்கப்படும்.

ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் போது பெறுகைத் தொகைக்காக ரூபா ஆயிரத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூபா 10 வீதம் (அதாவது 1%) முத்திரைக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

ஏதேனும் பெறுகையொன்றை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் மெதகம பிரதே சபையின் பெறுகைக்குழுவின் தீர்மானமாவதுடன், ஏதேனும் பெறுகையை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | சொத்து விபரம் | குறைந்தபட்ச கேள்வி (வருடாந்தம்) ரூ.சதம் | பெறுகைப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூ.சதம் | பெறுகைப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படும்) ரூ.சதம் |
|---|---|---|---|---|
| 01 | கொடிகமுவ மாட்டிறைச்சிக்கு கடையை குத்தகைக்கு விடல் | 4,286,875.00 | 5000.00 | 85,740.00 |
| 02 | மெதகம வாரச்சந்தை பன்றியிறைச்சி கடையை குத்தகைக்கு விடல் | 492,991.00 | 5000.00 | 9,860.00 |

# பத்துமின் வருகையுடன் பங்களாதேஷ் அணிக்கு எதிரான இலங்கையின் ஒருநாள் தொடர் ஆரம்பம்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் ஆட்டம் இன்று (13) சட்டோக்ராமில் நடைபெறவுள்ளது.

நடந்து முடிந்த டி20 தொடரை 2–1 என கைப்பற்றிய உற்சாகத்துடன் இலங்கை அணி ஒருநாள் தொடரில் களமிறங்கவுள்ளது. இதில் உபாதைக்கு உள்ளான நிலையில் டி20 தொடரில் பங்கேற்காத பத்தும் நிசங்க அணிக்கு திரும்புவது ஆரம்ப வரிசைக்கு பலம் சேர்ப்பதாக அமையும்.

பத்தும் கடைசியாக நடந்த ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இலங்கையின் முதல் வீரராக இரட்டைச் சதம் பெற்று சோபித்து வரும்



நிலையிலேயே களமிறங்கவுள்ளார். உபாதைக்கு உள்ளாகி இருந்த வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமாரவும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

இந்நிலையில் குசல் மெண்டிஸ் தலைமையில் இலங்கை ஒருநாள் அணி முழு பலத்துடன் களமிறங்க எதிர்பார்த்துள்ளது.

இதனிடையே இரு அணிகளுக்கும் இடையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட முறுகல் டி20 தொடரிலும் நீடித்த சூழலிலேயே ஒருநாள் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

குறிப்பாக உலகக் கிண்ணத்தில் அஞ்சலோ மத்தியூஸ் மீது பங்களாதேஷ் அணி டைம் அவுட் முறையில் ஆட்டமிழப்பு பெற்ற சர்ச்சை தொடர்ந்து நீடித்து வருகிறது.

ஏற்கனவே இலங்கை வீரர்களுடன் மோதலுக்கு வந்த பங்களாதேஷ் வீரர் தவ்ஹீத் ஹ்ரிதோய் ஐ.சி.சி. அபராதத்தையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மோதல் போக்கு ஒருநாள் தொடரிலும் நீடிப்பதை தவிர்ப்பது போட்டியை தொடர்வதற்கு ஆரோக்கியமாக அமையும்.

இலங்கை அணி பங்களாதேஷுக்கு எதிராக இதுவரை 54 ஒருநாள் போட்டிகளில் ஆடியிருப்பதோடு அதில் 42 இல் வென்று 10 போட்டிகளில் மாத்திரம் தோல்வியை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பகலிரவு போட்டியாக இன்றைய ஆட்டம் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் பங்களாதேஷ் ஒருநாள் தொடருக்கான 16 பேர் கொண்ட உத்தியோகபூர் இலங்கை அணி விபரம் நேற்று (12) வெளியிடப்பட்டது.

இலங்கை ஒருநாள் குழாம்: குசல் மெண்டிஸ் (தலைவர்), சரித் அசலங்க (உப தலைவர்), பத்தும் நிசங்க, அவிஷ்க பெர்னாண்டோ, சதீர சமரவிக்ரம, ஜனித் லியனகே, கமிந்து மெண்டிஸ், சஹன் ஆரச்சிகே, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, துனித் வெள்ளாலகே, அகில தனஞ்சய, சாமிக்க கருணாரத்ன, டில்ஷான் மதுஷங்க, பிரமோத் மதுஷான், லஹிரு குமார.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

## டி20 உலகக் கிண்ணம் முடியும் வரை சில்வர்வுட் பதவி நீடிப்பு



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட்டின் ஒப்பந்தக் காலம் எதிர்வரும் டி20 உலகக் கிண்ணப் போட்டி நிறைவு வரை இலங்கை கிரிக்கெட் சபை நீடித்துள்ளது.

சில்வர்வுட்டின் இரண்டு ஆண்டு ஒப்பந்தக் காலம் எதிர்வரும் ஏப்ரல் 14 ஆம் திகதி முடிவடையவுள்ளது. இதற்கு இரண்டு மாதங்களிலேயே டி20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவுள்ளது. டி20 உலகக் கிண்ணம் மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இங்கிலாந்தின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மற்றும் பயிற்சியாளரான சில்வர்வுட் கடந்த 2022 ஏப்ரல் மாதமே இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

சில்வர்வுட்டின் பயிற்சியின் கீழ் இலங்கை அணி இதுவரை டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 என ஒட்டுமொத்தமாக 91 போட்டிகளில் ஆடி அதில் 48 ஆட்டங்களில் வெற்றியீட்டி இருப்பதோடு 39 போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது.

## மாற்றுத்திறனாளிகளின் விளையாட்டுப் போட்டி



*தம்பலகாமம் குறூப் நிருபர்*

மாற்றுத்திறனாளிகளுக்கு உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி (11) மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தம்பலகாமம், மூதூர், கிண்ணியா, கந்தளாய், பட்டினமும் சூழலும், வெருகல், கோமரன்கடவல குச்சவெளி, சேருவில பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள சகன செவன அமைப்பின் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பட்டினமும் சூழலும் பிரதேசத்தில் உள்ள ஹோப் நிறுவனத்தின் மாற்றுத்திறனாளிகள் பங்கு பற்றியதுடன் அவர்களினால் இயலுமையுடைய அனைத்து போட்டி நிகழ்ச்சிகளிலும் இதன்போது பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பங்குபற்றி போட்டிகளில் வெற்றியீட்டிய மாற்றுதிறனாளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.



# சர்வதேச செய்திகள்

## சைப்ரஸில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது காசா உதவிக் கப்பல்

### உதவிக்கு காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்: 9 பேர் பலி

பஞ்சத்தின் விளிம்பில் இருக்கும் காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்கான புதிய கடல் பாதை ஒன்றை ஏற்படுத்தும் முன்னோடித் திட்டம் ஒன்றாக, சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து 200 தொன் உணவு பொருட்களை ஏற்றிய கப்பல் ஒன்று நேற்று (12) காசாவை நோக்கி புறப்பட்டது.

'ஓபன் ஆர்ம்' என்ற ஸ்பெயின் தொண்டு நிறுவனத்தின் இந்தக் கப்பல் அரிசி, மாவு மற்றும் உணவு பொருட்களை ஏற்றி சைப்ரசின் லர்னாகா துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்துள்ளது.

எனினும் இந்தக் கப்பல் காசாவில் எங்கு செல்லவுள்ளது என்பது பற்றிய திட்டம் வெளியிடப்படவில்லை.

இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய அரபு இராச்சியமே அதிக நிதி உதவி அளித்திருப்பதோடு அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட உலக மத்திய சமையலறை என்று தொண்டு நிறுவனம் ஏற்பாடுகளை செய்திருப்பதோடு ஸ்பெயின் தொண்டு நிறுவனம் கப்பலை வழங்கியுள்ளது.

'காசாவை நோக்கி தொடர்ந்து பயணிக்கும் மில்லியன் கணக்கான உணவுப்பொருட்கள் கொண்ட படகுகள் மற்றும் படகுகளுக்கான கடல்வழி பாதையை அமைப்பதே எங்கள் குறிக்கோளாகும்' என்று மேற்படி அமெரிக்க தொண்டு நிறுவனத்தின் நிறுவனரான ஜோஸ் அன்ட்ரஸ் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி எரின் கோர் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் குறிப்பாக வடக்கு காசாவுக்கான உதவிப் பொருட்கள் செல்வதை இஸ்ரேல் தொடர்ந்து தடுத்து வரும் சூழலில் அங்கு ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக மக்கள் உயிரிழந்து வருகின்றனர். காசாவில் பஞ்சம் ஒன்று ஏற்படுவது பற்றி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உதவி அமைப்புகள் எச்சரித்து வருகின்றன.

இந்நிலையில் காசாவுக்கு கடல் வழியாக உதவிகளை கொண்டு செல்லும் மற்றொரு முயற்சியாக அமெரிக்கா காசா கடற்கரையில் தற்காலிக துறைமுகம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

காசாவில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் அந்தப் பகுதியை வெளியுலகில் இருந்து இஸ்ரேல் முடக்கி இருக்கும் நிலையிலேயே அங்கு நேரடி உதவி விநியோகத்திற்கு தொண்டு நிறுவனங்கள் முயன்றுள்ளன.

காசாவில் துறைமுகக் கட்டமைப்பு ஒன்று இல்லாதபோதும், அழிக்கப்பட்ட கட்டடங்களின்; இடிபாடுகளை பயன்படுத்தி இறங்குதுறை ஒன்றை உருவாக்கவிருப்பதாக அந்தத் தொண்டு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சைப்ரஸில் மேலும் 500 தொன் உதவிகள் திரட்டப்பட்டிருப்பதாகவும் அவைகளும் காசாவுக்கு அனுப்பப்படும் என்றும் அது குறிப்பிட்டது.

காசாவின் வட மேற்காக வெறுமனே 320 கிலோமீற்றர் தொலைவிலேயே சைப்ரஸ் உள்ளது.

இந்தத் திட்டம் வெற்றி அளித்தால், 2007 ஆம் ஆண்டு காசாவில் ஹமாஸ் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் இஸ்ரேல் அந்தப் பகுதி மீது கொண்டுவந்த கடல்வழி முற்றுகையை மீறும் முதல் சம்பவமாகவும் இது இருக்கும்.

**உணவு இன்றி நோன்பு**

காசாவில் போர் நிறுத்த முயற்சிகளில் இழுபறி நீடிக்கும் நிலையில் இஸ்ரேலின் தாக்குதலுக்கு மத்தியிலேயே அங்குள்ள மக்கள் ரமழான் நோன்பை பிடித்து வருகின்றனர்.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் தெற்கு நகரான ரபாவில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் பொதியில் அடைக்கப்பட்ட உணவு மற்றும் அவரை விதைகளைக் கொண்டு நோன்பு துறந்ததாக கான்யூனிஸில் இருந்து அங்கு இடம்பெயர்ந்து வந்த முஹமது அல் மஸ்ரி தெரிவித்தார்.

'நாம் எதனையும் தயார் செய்யவில்லை. இடம் பெயர்ந்தவர்களிடம் என்ன இருக்கும்? மகிழ்ச்சியான ரமழானாக நாம் உணரவில்லை. மக்கள் குளிருக்கு மத்தியில் கூடாரங்களில் இருக்கிறார்கள்' என்றார்.

'இம்முறை ரமழான் இரத்தம் மற்றும் துன்பம், பிரிவு மற்றும் ஒடுக்குமுறையை சுவைக்கிறோம்' என்று கான் யூனிஸில் இருந்து இடம்பெயர்ந்த மற்றுமொருவரான முஹமது அபூ மத்தர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

காசா நகரில் இடிந்த கட்டடங்களுக்கு மத்தியில் ஒரு குடும்பம் தனது தரைமட்டமாக்கப்பட்ட வீட்டில் கடந்த திங்கட்கிழமை முதலாவது நோன்பை துறந்தது.

'இன்று ரமழானின் முதல் நாள். தாக்குதலில் இடிந்திருக்கும் எமது வீட்டின் இடிபாடுகளில் முதல் நோன்பை துறப்பதற்கு நாம் முடிவொடுத்தோம்' என்று ஓம் ஷஹர் அல் கத்தா என்பவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டார்.

காசாவுக்கான உதவி விநியோகம் போருக்கு முன்னர் இருந்த நிலையில் இருந்து மிகக் குறைவடைந்துள்ளது.

இந்நிலையில் சர்வதேச நாடுகள் காசாவுக்கு வானில் இருந்து உதவிகளை போடுவதற்கு ஆரம்பித்துள்ளன. எனினும் இந்த முறை பொருத்தமானதல்ல என்று உதவிப் பணியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்நிலையில் இஸ்ரேலிய இராணுவம் நேற்றும் உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது நடத்திய சரமாரித் தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர். காசா நகரில் உள்ள குவைட் சந்தியில் உதவிப் பொருட்களை எதிர்பார்த்து ஒன்று கூடிய மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மேலும் 20 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

காசாவில் உதவிக்கு காத்திருப்பவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த பெப்ரவரி 29 ஆம் திகதி காசா நகரில் நபுல்சி சுற்றுவட்டப்பாதையில் உதவி



லொறிக்காக காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேலிய படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 100க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் கடந்த ஆறு மாதங்களால் இஸ்ரேல் இடைவிடாது நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 31 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்ந்தும் ஸ்தம்பித்து காணப்படுகிறது. போர் நிறுத்தம் தற்காலிகமானதாக இருக்க வேண்டும் என்பதோடு ஹமாஸை ஒழிக்கும் தமது திட்டம் முன்னெடுக்கப்படும் என்று இஸ்ரேல் கூறுகிறது. மறுபுறம் போரை முடிவுக்குக் கொண்டுவரும் உடன்பாடு ஒன்றின் அடிப்படையிலேயே தமது பிடியில் இருக்கும் எஞ்சிய பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று ஹமாஸ் கூறுகிறது.

**இஸ்ரேலில் ரொக்கெட் மழை**

காசா போர் பிராந்தியம் எங்கும் பதற்றத்தை அதிகரித்திருக்கும் சூழலில் நேற்று லெபனானில் இருந்து இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்று மீது நூறுக்கும் அதிகமான ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதில் முதல் தாக்குதலில் 70க்கும் அதிகமான ரொக்கெட்டுகள் விழுந்திருப்பதோடு தொடர்ந்து 30 க்கும் அதிகமான ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கிழக்கு லெபனானின் பால்பெக் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இஸ்ரேல் நடத்திய ரொக்கெட் தாக்குதல்களில் குறைந்தது ஒரு லெபனான் சிவிலியன் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே இந்த ரொக்கெட் மழை விழுந்துள்ளது.

இந்தத் தாக்குதல்களுக்கு பொறுப்பேற்றிருக்கும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு, காசாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவும் லெபனான் மக்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு பதிலடியாகவுமே இது நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது.

மறுபுறம் வர்த்தகக் கப்பல்பாதையை தற்காப்பதற்கு எனக்கூறி அமெரிக்க மற்றும் பிரிட்டன் கூட்டணி மேற்கு யெமனில் உள்ள சிறு நகரங்கள் மற்றும் துறைமுக நகரங்கள் மீது கடந்த திங்கட்கிழமை நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டதாக யெமனின் சர்வதேசம் அங்கீகரித்த அரசு குறிப்பிட்டுள்ளது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாலைதீவில் இந்தியாவின் 'வெளியேற்றம்' ஆரம்பம்

மாலைதீவில் இருந்து முதல் கட்டமாக 25 இந்திய துருப்புகள் வெளியேறியதாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அத்து பவழத்தீவில் நிலைநிறுத்தப்பட்ட 25 இந்திய துருப்புகள் கடந்த மார்ச் 10 ஆம் திகதி வெளியேறியதாக அதிகாரிகளை மேற்கோள்காட்டி அந்நாட்டின் மிஹாரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த செப்டெம்பரில் பதவிக்கு வந்த ஜனாதிபதி முஹமது முயிசு, மாலைதீவில் நிலைகொண்டிருக்கும் இந்திய துருப்புகளை வெளியேற்றுவதாக உறுதி அளித்துள்ளார்.



இது தொடர்பில் இந்தியாவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து மாலைதீவில் இருக்கும் 89 இந்திய துருப்புகள் மற்றும் உதவிப் பணியாளர்களை மே 10 ஆம் திகதிக்கு மீளப்பெறுவதற்கு இந்தியா இணங்கியது.

இந்தியா தனது வெளியேற்றத்திற்கு தயாராகி வரும் நிலையில் மாலைதீவு கடந்த வாரம் சீனாவுடன் இராணுவ உதவி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

முயிசு ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியது தொடக்கம் இந்தியா மற்றும் மாலைதீவுக்கு இடையே முறுகல் நீடித்து வருகிறது.

## வன்முறைகளை அடுத்து ஹெய்ட்டி பிரதமர் விலகல்

ஹெய்ட்டியில் கடந்த பல வாரங்களில் வன்முறை அதிகரித்த நிலையில் அந்நாட்டு பிரதமர் ஏரியல் ஹென்றி பதவி விலகியுள்ளார்.

ஹெய்ட்டியில் ஆட்சி மாற்றம் ஒன்று குறித்து ஜமைக்காவில் பிராந்திய தலைவர்கள் கூடி பேச்சுவார்த்தை நடத்திய நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஆயுத கும்பல்கள் நாடு திரும்புவதை தடுத்த நிலையில் பிரதமர் ஹென்றி தற்போது போர்டோரிகோவில் சிக்கியுள்ளார்.



இந்நிலையில் வீடியோ அறிவிப்பு ஒன்றின் மூலம் தனது இராஜினாமாவை அறிவித்த பிரதமர் நாட்டு மக்களை அமைதி காக்கும்படி அழைப்பு விடுத்தார். '(ஆட்சி மாற்ற) சபை அமைக்கப்பட்ட பின் நான் தலைமை வகிக்கும் அரசு உடன் பதவி விலகும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்கால அடிப்படையில் 2021 ஜூலையில் பிரதமராக பதவியேற்ற ஹென்றி, தொடர்ந்து தேர்தலை ஒத்திவைத்து வந்தார். இந்நிலையில் பிரதமரை பதவி விலகக் கோரி ஆயுத கும்பல்கள் தலைநகர் போர்ட் அவு பிரின்ஸ் வீதிகளை கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 13ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

**411, ஈ.எச். குரே கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03.**
**தொ.: 0112371600 தொலைநகல்: 0112371671**

**இணையதளம்: www.leco.lk மின்னஞ்சல்: general@leco.lk**
**மின் கட்டணத் திருத்தம் - 2024 மார்ச்**

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 30(2)(C) பிரிவின் பிரகாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலின் கீழ் 2024 மார்ச் 5ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் பின்வரும் திருத்தப்பட்ட கட்டணம் இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தால் செயற்படுத்தப்படும்.

## மின்சார கட்டணம் திருத்தம் - 2024-03-05

**நுகர்வோர் பிரிவு**

**வீட்டு நுகர்வோர் பிரிவு**

| குழு | | அலகின் விலை (ரூபா/kWh) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| **மாதாந்த நுகர்வு அலகு kWh 0-60க்கு இடையே** | | | |
| குழு 1 | 0-30 | 8.00 | 150.00 |
| குழு 2 | 31-60 | 20.00 | 300.00 |
| **மாதாந்த நுகர்வு அலகு kWh 60க்கு மேல்** | | | |
| குழு 1 | 0-60 | 25.00 | |
| குழு 2 | 61-90 | 30.00 | 400.00 |
| குழு 3 | 91-120 | 50.00 | 1,000.00 |
| குழு 4 | 121-180 | 50.00 | 1,500.00 |
| குழு 5 | 180க்கு மேல் | 75.00 | 2,000.00 |
| **வீட்டுக்குரிய தேர்வு செய்ய முடியுமான கால அடிப்படையிலான கட்டண அறவிடல் முறை** | | | |
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 70.00 | 2,000.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 90.00 | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 30.00 | |
| **சமய மற்றும் தொண்டு நிறுவனங்கள்** | | | |
| குழு 1 | 0-30 | 8.00 | 150.00 |
| குழு 2 | 31-90 | 9.00 | 250.00 |
| குழு 3 | 91-120 | 18.00 | 600.00 |
| குழு 4 | 121-180 | 32.00 | 1,500.00 |
| குழு 5 | 180க்கு மேல் | 43.00 | 2,000.00 |

**மற்ற நுகர்வு அறவிடல் வகைகள்**

**ஒப்பந்தக் கேள்வி 42 kWh இற்கு குறைவு அல்லது சமமான மின்னழுத்த வோல்ட் 400/230 ஆகிய வழங்கல்**

| தொழில்துறை/ ஹோட்டல் (பயன்படுத்தப்படும் அலகு அடிப்படையில் கட்டணம்) | | அலகின் விலை (ரூபா/kWh) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| தொழில்துறை/ ஹோட்டல் (1-1/H-1) | ≤ 300 | 13.50 | 300.00 |
| தொழில்துறை/ ஹோட்டல் (1-2/H-2) | > 300 | 21.50 | 1,000.00 |
| **தேர்வு செய்ய முடியுமான கால அடிப்படையிலான கட்டண அறவிடல் முறை (தொழில்துறை)** | | | |
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 33.00 | 1,000.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 37.00 | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 28.00 | |
| பொதுப் பணி கட்டணம்/ அரச கட்டணம் 1 (பயன்படுத்தப்படும் அலகு அடிப்படையிலான கட்டணம்) | | அலகின் விலை (ரூபா/kWh) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா) |
| பொதுப் பணி கட்டணம்/ அரச கட்டணம் (GP1-1/GV 1-1) | ≤ 180 | 33.00 | 600.00 |
| பொதுப் பணி கட்டணம்/ அரச கட்டணம் (GP1-1/GV 1-2) | > 180 | 43.00 | 1,500.00 |

**கட்டணம் அறவிடல் 2: ஒப்பந்தக் கேள்வி 42 kWh இற்கு மேல், மின்னழுத்த வோல்ட் 400/230 ஆகிய வழங்கல்**

| தொழில்துறை (1-2) / ஹோட்டல் (H-2) | | அலகின் விலை (ரூபா/kWh) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா) | உச்ச கேள்வி கட்டணம் (ரூபா/kWh) |
|---|---|---|---|---|
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 30.50 | 5,000.00 | 1,500.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 37.00 | | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 25.50 | | |
| பொதுப் பணி (G.P -2)/ அரச கட்டணம் (GV -2) | | அலகின் விலை (ரூபா/kWh) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா) | உச்ச கேள்வி கட்டணம் (ரூபா/kWh) |
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 45.00 | 5,000.00 | 1,500.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 55.00 | | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 37.00 | | |

**கட்டணம் அறவிடல் 3: மின்னழுத்தம் கி. வோல்ட் 11க்கு மேற்பட்ட அல்லது சமமான வழங்கல்**

| தொழில்துறை (1-3) / ஹோட்டல் (H-3) | | அலகின் விலை (ரூபா/kWh) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா) | உச்ச கேள்வி கட்டணம் (ரூபா/kWh) |
|---|---|---|---|---|
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 30.00 | 5,000.00 | 1,400.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 36.00 | | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 24.50 | | |
| பொதுப் பணி (G.P -3)/ அரச கட்டணம் (GV - 3) | | அலகின் விலை (ரூபா/kWh) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூபா) | உச்ச கேள்வி கட்டணம் (ரூபா/kWh) |
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 44.00 | 5,000.00 | 1,400.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 54.00 | | |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 36.00 | | |
| வீதி விளக்கு (ரூபா/kWh) | | 45.00 | | |

**மின்னேற்றல் நிலையங்களின் மின் மோட்டார் வாகன மின்னேற்றல்**

| | | நேரோட்ட விரைவு மின்னேற்றல் சேவை | இரண்டாம் நிலை ஆடல் மின்னோட்ட மின்னேற்றம் |
|---|---|---|---|
| பகல் நேரம் | (0530 மணி தொடக்கம் 1830 மணி வரை) | 109.00 | 87.00 |
| உச்ச நேரம் | (1830 மணி தொடக்கம் 2230 மணி வரை) | 139.00 | 112.00 |
| உச்சமற்ற நேரம் | (2230 மணி தொடக்கம் 0530 மணி வரை) | 66.00 | 50.00 |

**பொது முகாமையாளர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**

**2024 மார்ச் 08 அன்று**






# நீர்ப்பாசன அமைச்சு
# நீர்ப்பாசன திணைக்களம்
## கீழ் மல்வத்து ஓய பல்துறை அபிவிருத்தி செயற்றிட்டம்
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

கீழேயுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| வேலைகள் இல. | வேலைகளின் தலைப்பு | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| LMMSDP/P/ NCB/2024 / 01 | வலுவூட்டப்படும் சட்டங்களில் சிறப்பியல்பு வலிமையானது 500N/mm$^2$ இற்கு நிகரானது அல்லது மேற்பட்டது (QT,QST,TMT போன்றவை) (தந்திரிமலை செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தின் அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு/ வேலைத்தளத்திற்கு வழங்கல் வேண்டும்.) | | 2000.00 | 35000.00 |
| | முறுக்கு உருக்கு - விட்டம் 12மிமீ | 1500 எண்ணிக்கையானது | 2000.00 | 35000.00 |
| | முறுக்கு உருக்கு - விட்டம் 16 மிமீ | 30 எண்ணிக்கையானது | | |
| | வலுவூட்டப்படும் சட்டங்களில் சிறப்பியல்பு வலிமையானது 250N/mm$^2$ இற்கு நிகரானது அல்லது மேற்பட்டது இலேசான உருக்கு- விட்டம் 06 மிமீ | 1255 கி.கி. | | |
| LMMSDP/P/ NCB/2024/ 02 | பம்பி வண்டியுடனான தரம் 15 முன்கலவை கொன்கிறீட். (தந்திரிமலை செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தின் அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு/ வேலைத்தளத்திற்கு வழங்கல் வேண்டும்.) | 330 க.மீ.$^3$ | 5,000.00 | 130,000.00 |
| | பம்பி வண்டியுடனான தரம் 20 முன்கலவை கொன்கிறீட். (தந்திரிமலை செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தின் அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு/ வேலைத்தளத்திற்கு வழங்கல் வேண்டும்.) | 60 க.மீ$^3$ | | |
| LMMSDP/P/ NCB/2024/03 | சீமேந்து பைகள் - 50கிகி(எஸ்எல்எஸ் 107,1247 அல்லது 1697) (தந்திரிமலை செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தின் அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு/ வேலைத்தளத்திற்கு வழங்கல் வேண்டும்.) | 488 பைகள் | 1,000.00 | 18,000.00 |
| | ஆற்று மணல் அல்லது சுத்தமாக்கப்பட்ட மணல். (தந்திரிமலை செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தின் அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு/ வேலைத்தளத்திற்கு வழங்கல் வேண்டும்.) | 20 கியுப் | | |
| | உலோகம் - (20மிமீ) (தந்திரிமலை செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தின் அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு/ வேலைத்தளத்திற்கு வழங்கல் வேண்டும்.) | 10 கியுப் | | |
| | உலோகம் - (25மிமீ) (தந்திரிமலை செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தின் அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு/ வேலைத்தளத்திற்கு வழங்கல் வேண்டும்.) | 21 கியுப் | | |
| LMMSDP/P/ NCB/2024/04 | கிரவல் (இனம் 1 மண், 50% இற்கு மேலான கிரவல் துகல்) (தந்திரிமலை செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தின் அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு/ வேலைத்தளத்திற்கு வழங்கல் வேண்டும்.) | 2500 கியுப் | 4,000.00 | 100,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/05 | கீழ் மல்வத்து ஓய பல்துறை செயற்றிட்டத்தின் மீள்குடியேற்ற பிரதேசத்தில் வெளியக வீதியில் (ஹந்துண்கமுவ) பெட்டி மதகின் நிருமாணம். | ஆகக்குறைந்த தரம் - சி-6 | 5,000.00 | 200,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/06 | கீழ் மல்வத்து ஓய பல்துறை செயற்றிட்டத்தின் மீள்குடியேற்ற பிரதேசத்தில் உள்ளக வீதியில் பெட்டி மதகு மற்றும் 600 மிமீ ஹியும் குழாய் மதகு ஆகியவற்றின் நிருமாணம். | ஆகக்குறைந்த தரம் - சி-6 | 5,000.00 | 200,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/07 | சரணைக்கல் 6'' x 9'' (தந்திரிமலை கீழ் மல்வத்து ஓய அணைக்கட்டு நீர்த்தேச்க அணைக்கட்டின் நிருமாணம்) | 1309 கியுப். | 5,000.00 | 200,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/08 | சரணைக்கல் 12'' x 18'' (தந்திரிமலை கீழ் மல்வத்து ஓய அணைக்கட்டு நீர்த்தேக்க அணைக்கட்டின் நிருமாணம்) | 1500 கியுப். | 5,000.00 | 200,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/09 | சரணைக்கல் 12'' x 18'' (தந்திரிமலை கீழ் மல்வத்து ஓய அணைக்கட்டு நீர்த்தேக்க அணைக்கட்டின் நிருமாணம்) | 1500 கியுப். | 5,000.00 | 200,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/10 | சரணைக்கல் 12'' x 18'' (தந்திரிமலை கீழ் மல்வத்து ஓய அணைக்கட்டு நீர்த்தேக்க அணைக்கட்டின் நிருமாணம்) | 1500 கியுப். | 5,000.00 | 200,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/11 | சரணைக்கல் 12'' x 18'' (தந்திரிமலை கீழ் மல்வத்து ஓய அணைக்கட்டு நீர்த்தேக்க அணைக்கட்டின் நிருமாணம்) | 1500 கியுப். | 5,000.00 | 200,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/12 | சரணைக்கல் 12'' x 18'' (தந்திரிமலை கீழ் மல்வத்து ஓய அணைக்கட்டு நீர்த்தேக்க அணைக்கட்டின் நிருமாணம்) | 1500 கியுப். | 5,000.00 | 200,000.00 |
| LMMSDP/P/ NCB/2024/13 | சரணைக்கல் 12'' x 18'' (தந்திரிமலை கீழ் மல்வத்து ஓய அணைக்கட்டு நீர்த்தேக்க அணைக்கட்டின் நிருமாணம்) | 710 கியுப். | 5,000.00 | 100,000.00 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் எந்தவொரு அரசாங்க நிறுவனத்தினாலும் தரம் அல்லது வேறேதாவது காரணத்தினால் நிராகரிக்கப்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.
3. விபரக்குறிப்புக்கள் மற்றும் மதிப்பீட்டு தகவுத்திறன் ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படுவதுடன் மேற்குறிப்பிட்டுள்ள தகவுத்திறனின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு செய்யப்படும்.
4. 2024 மார்ச் 13 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 3 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நேரங்களில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து மேலதிக தகவலைப் பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம் (தொலைபேசி: 025-2227887).
5. 2024 மார்ச் 13 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 3 ஆம் திகதியன்று வரையும் வாரத்தின் வேலை நாட்களில் தந்திரிமலையிலுள்ள செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகையை செலுத்திய பின்னர் அல்லது தப்ரபேன் இலங்கை வங்கியின் 0007042374 (கணக்கின் பெயர் - கீழ் மல்வத்து ஓய பலநோக்கு அபிவிருத்தி செயற்றிட்டம்) என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பின்னர், பணப்பற்றுச்சீட்டை immpproject@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பலாம் (விலைமனுவானது மின்னஞ்சல் வழியாக வழங்கப்படும்.)
